# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor | SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் / நவம்பர் 12/2023 / NOVEMBER 12/2023


## சிலாங்கூர் பட்ஜெட் 2024 நேரலையில் பார்க்கலாம்

**ஷா ஆலம்,** நவம்பர் 10 அன்று சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றத்தில் டத்தோ மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி அவர்களால் சிலாங்கூர் பட்ஜெட் 2024 தாக்கல் செய்யப்படும். அதன் விளக்கக்காட்சியை மாலை 3 மணிக்கு மீடியா சிலாங்கூர் முகநூல் மூலம் நேரலையில் பார்க்கலாம். இந்த நிகழ்வைச் சிலாங்கூர்கினி போர்டலில் மூன்று பதிப்புகளில் (selangorkini.my) காண முடியும். அவை மெண்டரின் (selangorkini.my/zh-hans/) மற்றும் தமிழ் (selangorkini.my/ta/). ஆகும். மேலும், ஆங்கிலப் பதிப்பை selangorjournal.my என்ற இணைப்பின் மூலம் அணுகலாம் பட்ஜெட் சிலாங்கூர் 2024 பதிப்பு அடங்கிய சிலாங்கூர்கினி நாளிதழ் நவம்பர் 11 அன்று விநியோகிக்கப்படும்.




## மலேசியர்களுக்கு சிறந்த ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் - மந்திரி புசார்

**ஷா ஆலம்,** மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, குறிப்பாகத் தொழில்நுட்ப மற்றும் தொழில் துறைகளில் சிறந்த ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

புதிய தொழில்துறை திட்டம் (NIMP) 2030 இன் கீழ் சராசரி சம்பள இலக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் RM4,510 அடைய வேண்டும் என்று கோம்பாக் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் கூறினார்.

புள்ளியியல் துறையின் 2022 இன் வருமான ஆய்வு அறிக்கையின் படி, தற்போது நாடு முழுவதும் ஊதிய இடைவெளி உள்ளது, 11.5 சதவீதம் குடும்பங்கள் மட்டுமே RM16,000 மற்றும் அதற்கு மேல் வருமானம் பெறுகின்றன.

"அதாவது 89.5 சதவீத குடும்பங்கள் அதை விட குறைவான சம்பளம் பெறுகின்றன. இந்த சதவீதத்தில், கிட்டத்தட்ட 40 சதவீத குடும்பங்கள் மாதத்திற்கு RM5,000க்கும் குறைவாக சம்பாதிக்கின்றனர்.

"மலேசியர்களின் கவலைக்கு முக்கிய காரணங்களில் ஒன்று பொருளாதாரம் அவர்களை ஓரங்கட்டுகிறது மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கவில்லை என்பதை இது தெளிவாக காட்டுகிறது" என்று அவர் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதத்தில் கூறினார்.

வேலையின்மை விகிதம் மூன்று சதவீதமாக குறைந்திருந்தாலும், அதிக அல்லது நியாயமான ஊதியம் வழங்கவில்லை என்ற பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை என்று அமிருடின் மேலும் கூறினார்.

"தொழிலாளர் உற்பத்தித்திறன் குறைந்துள்ளது என்று முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் (எம்ஐடிஐ) கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

"நாம் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருந்தாலும் உற்பத்தி திறன் விகிதம் ஊதிய விகிதத்துடன் நெருக்கமான தொடர்புடையது, ஆனால், அதிக ஊதியத்தை வழங்க முடியவில்லை," என்று அவர் கூறினார்.




## இந்திய தலைவர்களுக்கு சித்தம் பாராட்டு

**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநில இந்தியத் தலைவர்களை சித்தம் பாராட்டு தெரிவித்து கேடயம் வழங்கி சிறப்பித்தது. ஏறக்குறைய 40 பேர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் டத்தோ மரியா ஹம்சா கேடயம் வழங்கி சிறப்பித்தார்.

சித்தம் வழி சிலாங்கூர் இந்தியர்களை தொழில் முனைவோர்களாக உருமாற்றம் செய்வது அதன் தலையாய நோக்கமாகும். அதன் எல்லாத் திட்டங்களும் சிலாங்கூரில் உள்ள 62 இந்திய சமுதாயத் தலைவர்களை (KKI) கொண்டு இந்நாள் வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நாள் வரையில் இந்தியத் தலைவர்கள் கொடுத்து வந்த பேராதரவுக்கு நன்றி கூறும் வகையில் தற்பொழுது புதிதாக ஹிஜ்ரா தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பு ஏற்றுள்ள டத்தோ மரியா இந்தியத் தலைவர்களை கௌரவித்தார்.

சிலாங்கூர் மாநில ஹிஜ்ராவின் கீழ் சித்தம் செயல்படுகிறது. சித்தாமிக்கு கெனத் சைம் தலைவராக செயல்படுகிறார். சித்தம் இந்தியர் நலன் கருதி உருவாக்கப் பட்டது. இந்தியர்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டி அமைக்கப் பட்டது. இதுவரையில் 2,000 பேர்களுக்கு மேல் பல்வேறு பயிற்சிகளை வழங்கியுள்ளது. வியாபாரத்தில் இந்தியர்கள் ஈடுபட வேண்டி பல தளவாடப் பொருட்களும் வழங்கி வருகின்றது.

சித்தமின் எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்திய சமுதாயத் தலைவர்கள், அதன் அடி மட்ட வேலைகளை செய்து வருகின்றனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழி மித்ரா உதவி இந்தியர்கள் வரவேற்பு



**செமினி,** உலு லங்காட் தொகுதி இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கை குழு அத்தொகுதி மக்கள் நீதி கட்சியுடன் இணைந்து மித்ரா நிதியுதவியுடன் ஏற்பாடு செய்த நிகழ்விலும் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

தேசிய தின ஆடை அலங்கார போட்டி, வர்ணம் தீட்டும் போட்டி, சொல்வதெழுதல் போட்டி போன்ற கல்வி, கலாச்சாரம், தேச பற்றுதலை ஊட்டும் நிகழ்வுகள் படைக்கப்பட்டன. இந்நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று 50 பேர் பரிசுகளை வென்றனர்.

அத்துடன் தொகுதியின் ரிஞ்சிங் வட்டாரத்தில் உள்ள டொமினியன் தோட்டத் தமிழ்ப்பள்ளி, ரிஞ்சிங் தோட்ட தமிழ்ப்பள்ளி, செமினி தோட்ட தமிழ்ப்பள்ளி ஆகியவைகளின் சாதனைகளை அங்கீகரித்து தலா ரி.ம. 500 ஊக்குவிப்பு பரிசும் வழங்கப்பட்டது. .

மாணவர்களுடன் வந்திருந்த பொற்றோர்களுக்கு மருத்துவ முகாம் மற்றும் உற்சாகமூட்டும் டாக்டர் காதர் இப்ராஹிம் சொற்பொழிவும் இடம் பெற்றது.

உலு லங்காட் தொகுதியில், மித்ரா நிதி வேண்டி 8 திட்டங்களுக்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப் பட்டது. அதன் பிறகு நிதி ஒதுக்க பட்டது என்று ஏற்பாட்டு குழுவை சார்ந்த இராசன் கூறினார்.

மேற்கண்ட பள்ளி நிகழ்வுகள் தவிர்த்து 30 இந்திய மாதர்களுக்கு மலர் மாலை கட்டும் பயிற்சி, இளைஞர்களுக்கு வீடியோ பயிற்சி மற்றும் ட்ரோன் பயிற்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது அவர்களுக்கு உபரி வருமானத்தை கொண்டு வரும் இப்படிப்பட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தியதும் இந்திய இளைஞர்களே !

நமது இளைஞர்கள் இது போன்ற பல பயனுள்ள விளையாட்டு மற்றும் சமூக நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய கூடியவர்கள். ஆனால் ஏற்பாடு செலவுகளுக்கு நிதி அளிக்க எவருமில்லை என்ற குறையை மித்ரா உதவி நிதி போக்கும். எதிர்காலத்தில் அதிகமான நம் இளைஞர்கள் இது போன்ற நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக ஊக்கமளிக்கும் ஒரு முன் முயற்சி என்றார்.

இதனால் நம் இளைஞர்களை ஆக்ககரமான நிகழ்வுகளில் ஈடுப்படுத்துவதன் வழி, தவறான கலாச்சார பாதிப்புகளிலிருந்து அவர்களை காக்கலாம். அவர்களை நல்வழிப்படுத்த தேவையான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் மித்ரா நிதி பெறுவது நல்ல ஒரு திட்டமாகும்.

இந்தியச் சமுதாய மேம்பாட்டுக்கு ஒரு தொகுதி ரி.ம 100,000.00 வீதம் நாட்டில் உள்ள 72 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு மித்ராவின் நிதியை ஒதுக்கிய தலைவர் டத்தோ ரமணனுக்கும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிமுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று உலு லங்காட் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்பு அதிகாரியான இராசன் முனுசாமி தெரிவித்தார்.

மித்ராவின் நிதியை பகிர்ந்தளிக்கும் குழுவை நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட குழு வழி நடத்துவதோடு, லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர், நிதி ஒதுக்கீடுகள் பிரதமரின் ஒப்புதலுக்குப் பின் வழங்கப் படுகிறது.

இந்நிதி இந்தியச் சமுதாயத்தின் மேம்பாட்டிற்க்கு மட்டுமின்றி இளைஞர் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான சிறந்த திட்டம். இந்திய இளைஞர்கள் இதுபோன்ற நல்ல திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார் உலு லங்காட் நாடாளுமன்ற உறுப்பினர் சானி ஹம்சான்.

# ஹிஜ்ரா ஏற்பாட்டில்
## கிள்ளானில் தீபாவளிச் சந்தை

**கோலக் கிள்ளான்,** யாயாசான் ஹிஜ்ரா அறவாரியம் அடுத்த மாதம் தீபாவளிச் சந்தையை நடத்தவுள்ளது. இந்த வர்த்தகச் சந்தையில் 100 இந்திய தொழில்முனைவோருக்கு வர்த்தக வாய்ப்பு வழங்கப்படும் என்று தொழில் முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

கிள்ளான், செட்டி பாடாங்கில் நடைபெறும் இந்த தீபாவளிச் சந்தையில் பெருநாளுக்குத் தேவையான பொருள்களை விற்பனை செய்வதற்குரிய வாய்ப்பு இந்திய வணிகர்களுக்கு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வியாபார லைசென்ஸ் மற்றும் கடைகளை (தற்காலிக கூடாரங்கள்) ஏற்பாடு செய்யும் பொறுப்பினை சித்தம் எனப்படும் சிலாங்கூர் இந்திய தொழில் ஆர்வலர் மையம் ஏற்றுக் கொள்ளும் என்று அவர் சொன்னார்.

இந்த சந்தையில் 50 முதல் 100 வணிகர்கள் பங்கு கொள்ளவிருக்கின்றனர். இந்த கடைகளுக்கான விண்ணப்பங்கள் இன்னும் இரு வாரங்களில் வரவேற்கப்படும் என்று சித்தம் ஏற்பாட்டில் இன்று இங்கு நடைபெற்ற 2023ஆம் ஆண்டிற்கான சூப்பர் டிக்டாக் வியூகப் பயிற்சித் திட்டத்தை முடித்து வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு நாள் பயிற்சியில் கிள்ளான் வட்டாரத்தைச் சேர்ந்த 40 இந்திய தொழில் முனைவோர் கலந்து கொண்டனர். இந்த பயிற்சியின் நிறைவு விழாவில் ஹிஜ்ரா அறவாரியத்தின் இடைக்கால தலைமைச் செயல்முறை அதிகாரி நோர்மைஸா யாஹ்யாவும் கலந்து கொண்டார்.

# கூடுதல் ஜோம் ஷாப்பிங் தீபாவளி வவுச்சர்களுக்கான விண்ணப்பம்

**கிள்ளான்,** செந்தோசா தொகுதியில் உள்ள இந்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அதன் பிரதிநிதி மாநில அரசிடம் இருந்து கூடுதல் ஜோம் ஷாப்பிங் தீபாவளி வவுச்சர்களுக்கு விண்ணப்பிக்க உள்ளார்.



இப்பகுதியில் உள்ள மக்கள் பெரும்பாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட இந்தியர்களாக உள்ளனர் என டாக்டர் ஜி குணராஜ் கூறினார்.

“இதுவரை எங்களுக்கு 650 வவுச்சர்கள் கிடைத்துள்ளன, இந்த எண்ணிக்கை போதாது, ஏனெனில் இங்கு 90,000 வாக்காளர்கள் உள்ளனர், அவர்களில் 50 சதவீதம் பேர் அதாவது சுமார் 45,000 பேர் இந்திய வாக்காளர்கள் ஆவர்.

இம்முறை வவுச்சர் எண்ணிக்கையை 1,000 ஆக உயர்த்தி, பலர் பயன்பெறும் வகையில் அவர்களின் சுமை குறையும் என நம்புகிறேன்,” என்றார்.

பண்டார் புக்கிட் திங்கி அடுக்குமாடி 2 இல் துப்புரவு பணியை நடத்திய பிறகு அவர் இவ்வாறு கூறினார்.

சிலாங்கூர் பட்ஜெட் 2023ல் ஜோம் ஷாப்பிங் வவுச்சர் திட்டத்திற்காக RM16.48 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இது 82,400 பெறுநர்களுக்கு பயனளிக்கும் என டாக்டர் ஜி குணராஜ் குறிப்பிட்டார்.

# தீபாவளியை முன்னிட்டு இந்திய வணிகர்களுக்கு வர்த்தக கடனுதவி



**ஷா ஆலம்,** இம்மாதம் கொண்டாடப்படவிருக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வர்த்தகத்தில் ஈடுபட விரும்பும் இந்திய சிறுதொழில் வர்த்தகர்களுக்கு உதவும் நோக்கில் ஐ-பெர்மூசிம் எனப்படும் விழாக்கால கடனுதவித் திட்டத்தை யாயாசான் ஹிஜ்ரா அறவாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வணிகர்களுக்கு 20,000 வெள்ளி வரை கடனுதவி வழங்கப்படும் என்று ஹிஜ்ரா அறவாரியத்தின இடைக்கால தலைமைச் செயல்முறை அதிகாரி நோர்மைசா யாஹ்யா கூறினார்.

பெருநாள் காலத்தின்போது வியாபாரத்திற்கு கூடுதல் மூலதனம் தேவைப்படுவோரின் சுமையைக் குறைக்கும் நோக்கில் மாநில அரசு இத்திட்டத்தை அமல் படுத்தியுள்ளது என்றார் அவர்.

இந்த ஐ-பெர்மூசிம் திட்டத்தின் கீழ் பெறுவோர் சிலாங்கூரில் பிறந்தவர்களாக அல்லது பத்தாண்டுகளுக்கும் மேல் மாநிலத்தில் வசிப்பவர்களாக இருப்பது அவசியம். கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான கால அவகாசம் 25 வாரங்கள் அல்லது ஆறு மாதங்களாகும்.

இந்த கடனுதவித் திட்டத்திற்கு இணையம் வாயிலாக அல்லது அருகிலுள்ள ஹிஜ்ரா கிளைகள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

# யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர்
## கடனுதவி திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

**ஷா ஆலம்,** சிறிய அளவில் வணிகம் செய்ய அல்லது தங்கள் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு மூலதனம் தேவைப்படும் தொழில் முனைவோர் யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் கீழ் நிதியுதவி திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், ஐ-பிஸ்னெஸ் திட்டம், ஜீரோ டு ஹீரோ திட்டம், நியாகா டாருல் எஹ்சான் (நாடி) திட்டம், கோ டிஜிட்டல் திட்டம் மற்றும் ஐ-சீசனல் திட்டம் ஆகியவை மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் நிதியுதவித் தகவலை https://www.hijrahselangor.com/ri-salah-skim-hijrah/ அல்லது http://mikrokred-it.selangor.gov.my/ என்ற இணைப்பின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம்.

நிதி தொடர்பான கூடுதல் தகவல்களைப் பெற, தொழில் முனைவோர் அருகிலுள்ள 19 ஹிஜ்ரா கிளைகளையும் தொடர்பு கொள்ளலாம்.

மூலதனப் பற்றாக்குறையின் சிக்கலை எதிர்கொள்ளும் வியாபாரிகள் மற்றும் சிறு வியாபாரிகளுக்கு ஹிஜ்ரத் நிதிக் கடன்களை வழங்குகிறது.

நிபந்தனைகளின்படி கடன்கள் வழங்கப்படுகின்றன மற்றும் ஒப்புதல் தொகை RM100,000 வரை வழங்கப்படுகிறது.

ஜூன் 2023 வரை, மொத்தம் 58,464 பங்கேற்பாளர்கள் RM768.8 மில்லியனுக்கும் அதிகமான நிதியின் மூலம் பயனடைந்துள்ளனர். அதில் மொத்தம் 34,823 பெறுநர்கள் அல்லது 60 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோர் ஆவர்.

# மித்ரா வழி தமிழ்ப்பள்ளிகளுக்கு 6,000 மடிக்கணினிகள்




**காஜாங்,** கல்வி இயக்கவியல் திட்டத்திற்காக நாடு முழுவதும் உள்ள 525 தமிழ்ப்பள்ளிகளுக்கும் புதுப்பிக்கப்பட்ட 6,000 மடிக்கணினிகளை மித்ரா எனப்படும் இந்திய சமூக உருமாற்றப் பிரிவு வழங்கும்.

மித்ராவின் 2023ஆம் ஆண்டிற்கான தமிழ்ப்பள்ளி கணினி உதவித் திட்டத்தின் கீழ் இந்த உபகரணங்கள் கட்டங் கட்டமாக விநியோகிக்கப்படும் என்று மித்ரா நடவடிக்கை குழுத் தலைவர் டத்தோ ஆர்.ரமணன் கூறினார்.

தமிழ்ப்பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு இந்த மடிக்கணினிகள் பயன்படுத்தப்படும் என்று சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக மித்ரா 2.994 மில்லியன் ரிங்கிடை ஒதுக்கியுள்ளதாகவும் இதன் மூலம் கிட்டத்தட்ட 6 ஆயிரம் மடிக்கணினிகள் 525 தமிழ்ப்பள்ளிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வேளையில் கூகுள் எடுகேசன் பிரிவு இயக்குநர் ராஜா அஸ்மி அடாம், மித்ரா இயக்குநர் நவீந்திரன் நாயர், பள்ளியில் தலைமையாசிரியர் விஜயலட்சுமி ஆகியோருக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். இத்திட்டத்தை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு இப்பாராட்டுகள் என்று அவர் கூறினார்.

காஜாங் தமிழ்ப்பள்ளியை தொடர்ந்து அனைத்து தமிழ்ப்பள்ளிக்கும் மடிக்கணினிகள் வழங்கப்படும்.

ஆக அதிகமாக ஜொகூர் துன் அமினா தமிழ்ப்பள்ளி 120 மடிக்கணினிகளும் ஆகக் குறைவாக 2 மடிக்கணினிகளும் வழங்கப்படவுள்ளது. குறைந்த மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட தமிழ்ப்பள்ளிகளுக்கு அந்த 2 மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளது என்று ரமணன் குறிப்பிட்டார்.

# 10 கோடி வெள்ளி நிதியை மித்ரா ஆக்ககரமான முறையில் செலவிடும்

**கோலாலம்பூர்,** பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அண்மையில் சமர்ப்பித்த 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மித்ரா எனப்படும் இந்திய சமூக உருமாற்றுப் பிரிவுக்கு 10 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஆக்ககரமான முறையிலும் உயர்நெறியைப் பின்பற்றியும் செலவிடப்படும் என்று மித்ரா சிறப்பு பணிக்குழுவின் தலைவர் டத்தோ ஆர்.ரமணன் கூறினார்.

இந்த நிதியின் வாயிலாக மேற்கொள்ளப்படும் திட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் எம்40 தரப்பினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் சொன்னார்.

அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த நிதி மலேசியாவிலுள்ள இந்திய சமூகத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு கூடினபட்ச அனுகூலங்களை வழங்குவதை உறுதி செய்வதில் தமது கடப்பாட்டை முறையாக ஆற்றவுள்ளதாக அவர் சொன்னார்.

இந்திய சமூகத்தை மையமாகக் கொண்ட சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள மடாணி வரவு செலவுத் திட்டத்தில் பத்து கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளத் தகவலை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வெளியிட்டார்.

இதனிடையே, பிரதமர் நேற்று தாக்கல் செய்த 39,380 கோடி வெள்ளி வரவு செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசிய சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினருமான டத்தோ ரமணன், அதிக நிதி ஒதுக்கீட்டை உள்ளடக்கிய நாட்டின் முதலாவது வரவு செலவுத் திட்டமாக இது விளங்குகிறது என்றார்.

# 22 ஆயிரம் பேருக்கு தீபாவளி பற்று சீட்டுகள் வெ.4.4 மில்லியன் ஒதுக்கிடு



**ஷா ஆலம்,** சிலாங்கூரில் வசிக்கும் இந்தியர்களுக்குப் பல்வேறு திட்டங்களை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் கடந்த பல ஆண்டுகளாகப் பி.40 பிரிவைச் சேர்ந்த சிலாங்கூர் இந்தியர்களுக்குத் தீபாவளி கொண்டாட்டத்திற்கான ஆர்.எம்.100.00 பற்று சீட்டு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவ்வாண்டு இத்தொகை ரிம. 200.00 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று சிலாங்கூர் மாநில அரசு ஆட்சிக் குழு உறுப்பினர் பாப்பாராயிடு தெரிவித்தார்.

சிலாங்கூரில் மொத்தம் 56 சட்ட மன்ற தொகுதிகள் உள்ளன. இத்தொகுதிகளில் 40,000 திற்கும் மேற்பட்ட இந்திய வாக்காளர்களை கொண்ட தொகுதி செந்தோசா தொகுதியாகும். ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள இந்திய வாக்காளர்கள் எண்ணிக்கையை முன் வைத்து இந்த தீபாவளி பற்று சீட்டு ஒதுக்கப் படுகிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் 300 முதல் 600 வரை ஒதுக்கப்பட்டுள்ளது. சிலாங்கூர் முழுவதும் மொத்தம் 22,000 இந்திய குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன் அடைவர்.

இத்திட்டத்தில் பங்கு பெற முன்பு ரிங்கிட் மலேசியா 2,000.00த்திக்கும் குறைவான குடும்ப வருமானம் இருக்க வேண்டும். தற்போது சிலாங்கூர் மாநில மக்களின் மாதந்திர வருமானம் அதிகரித்து விட்டது. இதனால் குடும்ப வருமானம் ரி.ம. 3,000.00 குறைவானவர்கள் இத்திட்டத்தில் பங்கு பெறலாம் என்று அவர் கூறினார்.

நவம்பர் 4 ஆம் தேதி கிள்ளான் செட்டி பாடாங் வட்டாரத்தில் சிலாங்கூர் மாநில அளவிலான தீபாவளி உபசரிப்பு நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கு மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி தலைமை தாங்குவார்.

இத்தருணத்தில் தீபாவளி கொண்டாடும் அனைத்து இந்துக்களுக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் கூறினார்.



# வேலை செய்யும் தாய்மார்களுக்கு வெ.1,000 உதவித் தொகை

**கோல சிலாங்கூர்,** வேலை செய்யும் பெண்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் நோக்கில் சிலாங்கூர் அரசு சிறார் பராமரிப்பு உதவித் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் மாநிலத்திலுள்ள 5,000 பெண்கள் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

பன்னிரண்டு வயதுக்கும் கீழ்பட்ட மூன்று பிள்ளைகளை கொண்ட வேலை செய்யும் பெண்கள் மாதம் 1,000 வெள்ளியை உதவித் தொகையாகப் பெறுவதற்கு மாமாகெர்ஜா என்ற உதவித் திட்டம் வகை செய்வதாக மகளிர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் அன்ஃபால் சஹாரி கூறினார்.

வேலை செய்யும் பெண்கள் எதிர்நோக்கும் குழந்தை பராமரிப்பு செலவின சுமையை மாநில அரசு உணர்ந்துள்ள காரணத்தால் 50 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் இந்த திட்டத்தை அமல்படுத்தியுள்ளது என்று அவர் சொன்னார்.

இந்த திட்டத்தின் வாயிலாக வேலை செய்யும் பெண்கள் தங்கள் பிள்ளைகளை பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி அல்லது பராமரிப்பு மையங்களுக்கு அனுப்புவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என அவர் தெரிவித்தார்.

தரமான குழந்தை பராமரிப்பு மையங்களை உருவாக்குவதன் மூலம் பிள்ளைகளின் மேம்பாட்டை உறுதி செய்யும் அதேவேளையில் பெற்றோர்களும் மனநிம்மதியுடன் தங்கள் பணியை மேற்கொண்டு உற்பத்தியை பெருக்குவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றார் அவர்.

## தீபாவளியை முன்னிட்டு 400 பேருக்கு இலவசப் பற்றுச் சீட்டுகள் விநியோகம்

**கோம்பாக்,** அடுத்த மாதம் கொண்டாடப்படவிருக்கும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சுங்கை துவா தொகுதியில் உள்ள வசதி குறைந்த 400 பேருக்கு தலா 200 வெள்ளி மதிப்பிலான பற்றுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த பற்றுச் சீட்டின் மதிப்பு 100 வெள்ளியிலிருந்து 200 வெள்ளியாக உயர்த்தப்பட்டது இந்திய சமூகம் மீது மாநில அரசு கொண்டுள்ள பரிவைக் காட்டுகிறது என்று பத்து கேவ்ஸ் இந்திய சமூக நல மற்றும் மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவர் பி.விக்னேஸ்வரன் கூறினார்.

கடந்தாண்டு வரை இந்த பற்றுச் சீட்டின் மதிப்பு 100 வெள்ளியாக மட்டுமே இருந்தது. இவ்வாண்டில் அது 200 வெள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. இன வேறுபாடின்றி அனைத்து மக்களின் மீதான மாநில அரசின் அக்கறையின் வெளிப்பாடாக இந்நடவடிக்கை அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள செலாயாங் பாரு, ஸ்ரீ தெர்னாக் பேரங்காடியில் நடைபெற்ற நிகழ்வில் மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இந்திய குடும்பங்களுக்கு தீபாவளி இலவசப் பற்றுச் சீட்டுகளை வழங்கினார்.

நாட்டின் முக்கிய பெருநாள்களின் போது வசதி குறைந்தவர்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் இந்த பெருநாள் காலப் பற்றுச் சீட்டு வழங்கப்படுகிறது. 100 வெள்ளியாக இருந்த பற்றுச்சீட்டின் மதிப்பு இவ்வாண்டு முதல் 200 வெள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த பற்றுச் சீட்டை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்ட பாதுகாவலரான என். நாதன் (வயது 34) இதன் மூலம் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கும் தீபாவளி செலவுக்கான தொகையில் ஓரளவு மிச்சப்படுத்துவதற்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது என்றார்.

## ஆர்.எஸ்.1 திட்டத்தின் வெற்றிக்கான வாய்ப்புகளை சிலாங்கூர் பயன்படுத்தும்

**ஷா ஆலம்,** ஆசியானின் நுழைவாயிலாக உருவாகும் இலக்கை கொண்டுள்ள சிலாங்கூர், புதிய தொழிலியல் பெருந்திட்டம் 2030 (என்.ஐ.எம்.பி.) மூலம் கிடைக்கும் பல்வேறு வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்குரிய பொருத்தமான இடத்தில் உள்ளது.

நாட்டின் பொருளாதாரச் சக்தி என்ற முறையில் மக்கள் மற்றும் நட்புறவான வர்த்தகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசின் இரட்டை செயலாக்க முறையை மேலும் வலு படுத்துவதன் மூலம் இதனை அடைய முடியும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

முதலாவது சிலாங்கூர் திட்டத்தில் குறிப்பாக இட்ரிஸ் எனப்படும் தெற்கு ஒருங்கிணைந்த மேம்பாடு வட்டாரம் உள்ளிட்ட மூன்று பிரதேசங்களில் உள்ள மேம்பாட்டு வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதில் இந்நடவடிக்கை முக்கியமானதாக விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

## பொதுமக்களின் கருத்துகளை மாநில அரசு கவனத்தில் கொள்ளும்

**கோம்பாக்,** இங்குள்ள பண்டார் தாசேக் புத்ரியில் குப்பை எரிப்பு மையத்தை (இன்சினேரேட்டர்) நிர்மாணிக்கும் திட்டம் தொடர்பில் பொது மக்களின் கருத்துகளைப் பெற மாநில அரசு தயாராக உள்ளது.

இந்த திட்டம் சுற்றுச் சூழலுக்கும் மக்களின் சுகாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வட்டார குடியிருப்பாளர்களின் அச்சத்தை தாங்கள் கவனத்தில் கொண்டுள்ளதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார்.

பொது மக்களின் ஆதங்கத்தையும் கவலையையும் நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். உயர் தொழில்நுட்பத்தைக் கொண்டு இந்த குப்பை எரிப்பு மையம் கட்டப்படுகிறது என்பதை நான் அறிவேன். ஆனால் மக்களுக்கு இது குறித்து தெரியாமலோ அல்லது புரியாமலோ இருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான சரியான வழி திட்ட மேம்பாட்டாளருக்கும் பொது மக்களுக்கும் இடையே கலந்துரையாடல் நடத்துவதுதான். மக்களின் கருத்துகளைக் கேட்டறிய மாநில அரசு எப்போதும் தயாராக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்திற்கு மாற்றாக மறுசுழற்சி மறு பயனீடு மற்றும் நெகிழிப் பைகளுக்கான தடை போன்ற குப்பைகள் இல்லாத மேலாண்மை திட்டத்தை மாநில அரசு அமல்படுத்தலாம் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

### சீரான வளர்ச்சி, முன்னேற்றம், நிலைத்தன்மையை
## மாநில அரசு உறுதி செய்யும்

**கோம்பாக்,** சிலாங்கூர் அரசு வெளிப்படையாகவும் அனைத்து சமூகங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு இடையே சமநிலையை ஏற்படுத்தவும் தொடர்ந்து முயன்று வருகிறது மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

அத்தகைய முயற்சிகளில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட "சித்தம்" எனப்படும் சிலாங்கூர் இந்திய தொழில் ஆர்வலர் மையமும் ஒன்றாகும் என்று அவர் சொன்னார். சிலாங்கூர் அரசு வெளிப்படையானது. எழுகின்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கிறோம். இவ்வாறு செய்யும் பட்சத்தில் மாநிலத்திற்கு நிலைத்தன்மையைக் கொண்டு வர முடியும் என நம்புகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

சரும நிற வேறுபாடின்றி அனைத்து மக்களின் நலனையும் காத்து வருகிறோம். கடந்தாண்டு சித்தம் திட்டத்திற்கு பத்து லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்தோம். வரும் ஆண்டுகளில் இந்திய சமூகத்திற்கு ஒதுக்கப்படும் நிதி 30 லட்சம் வெள்ளி அல்லது 40 லட்சம் வெள்ளியாக இருக்கலாம் என்றார் அவர்.

# சிப்ஸ் மாநாட்டில் சாதனை

## வெ.150 கோடி விற்பனை இலக்கு எட்டப்பட்டது



**ஷா ஆலம்,** நான்கு நாள் சிலாங்கூர் அனைத்துலக உச்சநிலை மாநாடு (சிப்ஸ்) அதன் இலக்கான 150 கோடி வெள்ளி மதிப்பிலான பேச்சுவார்த்தை சாத்திய விற்பனையை வெறும் ஆறு மணி நேரத்தில் எட்டியுள்ளது.

மாநிலத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மற்றும் இங்கு கிளைகளை நிறுவ விரும்பும் புதிய நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் இந்த விற்பனை பதிவு செய்யப்பட்டது என்று சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த மாநாட்டின் நான்கு நாட்களில் 50,000 வர்த்தக பார்வையாளர்களை கவரும் இலக்கைத் தாண்டிவிட முடியும் என்று நம்பிக்கைத் தெரிவித்த அவர், இம்மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்கனவே 18,000 பேர் பதிவு செய்துள்ளனர் என்றார். பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வழி நேற்று காலை வரை மட்டும் 120 கோடி வெள்ளி மதிப்பிலான விற்பனை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உச்சநிலை மாநாட்டில் 1,000 க்கும் மேற்பட்ட கண்காட்சிகூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சிலாங்கூர் அனைத்துலக சமையல் விழா, சிலாங்கூர் அனைத்துலக காபி வாரம், சிலாங்கூர் சர்வதேச சுகாதார மாநாடு உள்ளிட்ட பல நிகழ்வுகளை ஒரே நேரத்தில் நடத்துகிறது.

இதற்கிடையில், சிலாங்கூர் இப்போது ஒரு மத்திய அரசாங்கத்துடன் இணைந்து சீர்திருத்தங்களின் உண்மையான உணர்வை வெளிப்படுத்துவதால் முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை மாநிலத்தில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம் என்று அமிருடின் கூறினார்.

# RM1.03 மில்லியன் விற்பனை வசூலைப் பதிவு செய்தது



**ஷா ஆலம்,** கடந்த மாதம் மலேசிய சுற்றுலா மற்றும் சுற்றுலா முகவர்கள் சங்கம் (மாட்டா) 2023 கண்காட்சியில் பங்கேற்றதன் மூலம் சிலாங்கூர் பெவிலியன் RM1.03 மில்லியன் விற்பனை வசூலைப் பதிவு செய்தது.

செப்டம்பர் 1 முதல் நடைபெற்ற கண்காட்சியின் மூன்று நாட்களில் 80,000க்கும் மேற்பட்ட நபர்கள் பெவிலியனைப் பார்வையிட்டதாக சுற்றுலா சிலாங்கூர் தலைமை நிர்வாக அதிகாரி அஸ்ருல் ஷா முகமட் கூறினார்.

ஜிஎல் ப்ளே செயலி மூலம் சிலாங்கூர் சுற்றுலா இந்த முறை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. விடுமுறையைக் கழிக்க வேண்டுமா? சிலாங்கூரை முதலில் சுற்றி பாருங்கள்! என்ற பிரச்சாரத்தின் முக்கியத்துவத்தை அவர் கூறினார்.

இதற்கிடையில், மாநிலம் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களை உள்ளடக்கிய உள்நாட்டு சுற்றுலாவின் வளர்ச்சியைத் அதிகரிப்பதற்குக் கண்காட்சி பல புதிய உத்திகளைக் கையாண்டது என மாட்டா தலைவர் நைஜெல் வோங் கூறினார்.

# 500 விவசாயிகளுக்கு 1,000 வெள்ளி ஊக்கத் தொகை



**ஷா ஆலம்,** விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடி மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள 500 பேருக்கு உற்பத்தியை பெருக்குவதற்கு ஏதுவாக தலா 1,000 வெள்ளியை மாநில அரசு வழங்குகிறது.

இந்த ஊக்கத் தொகை வரும் அக்டோபர் 31ஆம் தேதி வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இத்தொகையில் 500 வெள்ளி ரொக்கமாக வழங்கப்படும் வேளையில் எஞ்சிய தொகை விவசாயத்திற்கு தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்களாக வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மாநில அரசு ஆட்சிக்குழு நிர்ணயித்த 100 நாட்களில் ஐந்து முதன்மை வாக்குறுதிகளை நிறைவேற்றும் மாநில அரசின் நோக்கத்திற்கேற்ப இந்த திட்டம் அமல்படுத்தப்படுகிறது என்றார் அவர்.

மாநிலத்திலுள்ள 426,656 மலிவு விலை மற்றும் கிராம வீடுகளுக்கான மதிப்பீட்டு வரி விலக்கு மற்றும் இமாம், பிலால் மிற்றும் சியாக் அலவன்ஸ் உயர்வு தொடர்பான அறிவிப்பையும் மந்திரி புசார் இன்று வெளியிட்டார்.

இதனிடையே, வடகிழக்கு பருவமழையின் காரணமாக ஆண்டு இறுதியில் வெள்ளம் ஏற்படும் சாத்தியத்தைக் கருத்தில் கொண்டு மாநில அரசு இயந்திரம் முழுதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மந்திரி புசார் தெரிவித்தார்.

# மாநில அரசு RM4 மில்லியனைச் செலவிட்டுள்ளது - அனிஸ்



**ஷா ஆலம்,** சிலாங்கூர் சிறப்பு குழந்தைகள் உதவித் திட்டத்தை (அனிஸ்) செயல்படுத்த மாநில அரசு மொத்தம் RM4 மில்லியனைச் செலவிட்டுள்ளது என்று சமூக நலத்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

பெற்றோரின் சுமையைக் குறைக்க சிறப்புக் குழந்தைகளுக்கான சக்கர நாற்காலிகள், சுவாச உதவி மற்றும் பிசியோதெரபி சேவைகள் போன்ற உபகரணங்களின் தேவையை இந்த உதவி உள்ளடக்கியதாக அன்பால் சாரி கூறினார்.

"மொத்தம் 250 சிறப்பு குழந்தைகள் இந்த பலன்களைப் பெற்றனர். அனிஸ் மையத்தில் கற்பிக்கும் 33 ஆசிரியர்கள் சம்பளம் மற்றும் பயிற்சியின் பலனைப் பெற்றனர்," என்று அவர் கூறினார்.

"சிலாங்கூர் பல்கலைக்கழகம் (யுனிசெல்) மற்றும் சிலாங்கூர் பொது நூலகக் கழகம் (பிபிஎஸ்) ஆகியவற்றுடன் இணைந்து அவற்றின் வளாகங்களை மையங்களாகப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது," என்று அவர் கூறினார்.

# மூத்த குடிமக்கள் நட்புறவுத் திட்டம்

## 54 புதிய விண்ணப்பங்கள்



**ஷா ஆலம்,** கடந்த மாத இறுதியில் மூத்த குடிமக்கள் நட்புறவுத் திட்டம் (SMUE) திட்டத்திற்கு ஸ்ரீ செர்டாங் தொகுதி மொத்தம் 54 புதிய விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

RM150 மதிப்புள்ள ஷாப்பிங் வவுச்சர்களைப் பெறுவதற்குத் தகுதியான விண்ணப்பங்களுக்கான எண்ணிக்கை அவ்வப்போது அதிகரிக்கும் என அதன் பிரதிநிதி அப்பாஸ் அஸ்மி எதிர்பார்க்கிறார்.

இந்த ஆண்டு முதல், ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் வவுச்சர்களின் மதிப்பு RM150 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் RM37.5 மில்லியன் ஒதுக்கீட்டை உள்ளடக்கிய ஸ்கிம் மெஸ்ர இன்சான் இஸ்திமேவா (SMIS) பங்கேற்பவர்களுக்கும் அதே தொகை வழங்கப்படுகிறது.

ஜோம் ஷாப்பிங் வவுச்சர் பெறுபவர்களுக்கான குடும்ப வருமானத் தகுதி வரம்பு மாதத்திற்கு RM2,000 லிருந்து RM3,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.



# இவ்வாண்டு ஆகஸ்டு வரை 265 தனியார் வீடமைப்புத் திட்டங்களுக்குப் புத்துயிர்

**பந்திங்,** இவ்வாண்டு ஆகஸ்டு மாத நிலவரப்படி 2,337 கோடி வெள்ளி மொத்த மேம்பாட்டு மதிப்பைக் கொண்ட (ஜி.டி.வி.) 256 தனியார் வீடமைப்புத் திட்டங்கள் புத்துயிர் பெற்றுள்ளதாக ஊராட்சி மேம்பாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த வீட்டுத் திட்டங்களில் நிறைவு மற்றும் இணக்கச் சான்றிதழ் (சி.சி.சி.), குடியிருப்புத் தகுதிச் சான்றிதழ் (சி. எஃப்.ஒ.) அல்லது முன்னேற்ற நிலைக்கு மாற்றப்பட்டத் திட்டங்களும் அடங்கும் என்று துணை அமைச்சர் அக்மால் நஸ்ருல்லா முகமது நசீர் கூறினார்.

கடந்த ஆகஸ்டு மாத வெற்றி விகிதாசாரத்தின்படி நாங்கள் 34 வீட்டுத் திட்டங்களை புனரமைத்தோம். அதில் சி.சி.சி தகுதி பெற்ற 27 திட்டங்கள் மற்றும் முன்னேற்ற நிலைக்குத்திரும்பிய ஏழு திட்டங்களும் அடங்கும் என்று என்று அவர் நேற்று இங்கு வீடமைப்புஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பின் அறிமுக நிகழ்வுக்கு தலைமையேற்றப்பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரச்சனைக்குரிய தனியார் வீடமைப்புத் திட்டப் பணிக்குழுவின் வாயிலாக ஊராட்சி மன்றங்கள், நுட்ப நிறுவனங்கள், தனியார் நிதிக் கழகங்கள் மற்றும் பொதுத் துறை வீடமைப்பு கடனுதவி வாரியம் ஆகிய தரப்புடன் இணைந்து ‘தீர்வு மற்றும் தடுப்பு‘ நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்ளும் என்றும் அவர் சொன்னார்.

# 426,656 கிராம மற்றும் மலிவு விலை வீடுகளுக்கு வரி விலக்கு

**ஷா ஆலம்,** இவ்வாண்டு ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரையிலான இரண்டாம் தவணைக்கும் மலிவு விலை மற்றும்கிராமப்புறவீடுகளுக்கும் மாநில அரசு மதிப்பீட்டு வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்துள்ளது. இதன் வழி 426,656 குடியிருப்பாளர்கள் பயன் பெறுவர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநில அரசின் 100 நாள் ஆட்சியின் கடப்பாடுகளில் ஒன்றாக இந்த வரி விலக்குத் திட்டம் விளங்குவதாகக் கூறிய அவர், இந்த திட்டம் மாநிலத்திலுள்ள ஊராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட 2 கோடியே 94 லட்சத்து 15 ஆயிரம் வெள்ளி நிதியை உட்படுத்தியிருக்கும் என்றார்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்டத் தரப்பினர் வருமானத்தைப் பெருக்கவும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பைக் குறைக்கவும் இயலும் என்று அவர் தெரிவித்தார்.

இன்று இங்குள்ள சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா கட்டிடத்தில் நடைபெற்ற சிறப்பு செய்தியாளர் கூட்டத்தில் அவர் இந்த விபரங்களை வெளியிட்டார்.

மாநில அரசு தனது ஐந்து வாக்குறுதிகளுக்குமுன்னுரிமை அளித்து ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் தனது தேர்தல் கொள்கையறிக்கைகளை நிறைவேற்றும் என்று அமிருடின் கடந்த ஆகஸ்டு 23ஆம் தேதி கூறியிருந்தார்.

வீடுகளுக்கான வரி விலக்கு தவிர்த்து இமாம், பிலால் மற்றும் சியாக் அலவன்ஸ் உயர்வு, 500 விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்குச் சிறப்பு ஊக்குவிப்பு உள்ளிட்ட திட்டங்களும் மாநில அரசின் தேர்தல் வாக்குறுதியில் இடம் பெற்றுள்ளன.

கிராம மற்றும் மலிவு விலை வீடுகளுக்கு மதிப்பீட்டு வரி விலக்களிக்கும் திட்டத்தை மாநில அரசு கடந்த 2016ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தி வருகிறது.



# ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக்குச் சுகாதாரப் பரிசோதனைகள் அவசியம்

**சுபாங் ஜெயா,** ஸ்ரீ செர்டாங் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு சுகாதாரப் பரிசோதனைகளை முக்கிய திட்டமாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

“இந்த நாட்டில் நாம் நோய்வாய்ப்பட்டால் தான் மருத்துவமனைக்கு செல்வதை தடுக்கும் விதமாக சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கு, உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை அறிந்து ,காலத்தோடு உடல் ஆரோக்கிய பரிசோதனைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் அதன் வழி கடும் ஆரோக்கிய குறைவை தவிர்க்கலாம்.

இதுபோன்ற திட்டம் சுகாதாரப் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே அதிகரிப்பதால் ஆரம்பத்திலேயே நோய்களைத் தடுக்கும் முடியும் என்று அப்பாஸ் அஸ்மி கூறினார்.

”ஸ்ரீ செர்டாங் தொகுதியின் முன்னாள் பிரதிநிதியும் (டாக்டர் சித்தி மரியா மாமுட்) அடிக்கடி உடல்நலப் பரிசோதனை நிகழ்ச்சிகளை மாநிலத்தில் நடத்தினார். அதனால் நானும் சில மாற்றங்களுடன் உடல் அரோக்கிய பரிசோதனைகளை இங்கு தொடர்வேன்,” என்று அவர் கூறினார்.

பல்வேறு முகவர் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக அப்பாஸ் மேலும் கூறினார், இதனால் சுகாதாரம் தொடர்பான திட்டங்களை மேம்படுத்த முடியும், மக்கள் பயனடைவார்கள் என்று அவர் சொன்னார்.



# ரூமா சிலாங்கூர் கூ 60,000 யூனிட்களை உருவாக்கும் இலக்கை அடையும்

**ஷா ஆலம்,** சிலாங்கூர் கூ 60,000 வீடுகள் (யூனிட் ரூமா) 2025-க்குள் உருவாக்கும் இலக்கை அடைய மாநில அரசு நம்பிக்கையுடன் உள்ளது. டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, இந்த ஆண்டு இறுதிக்குள் 45,000 வீடுகள் கட்ட முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி 30 செப்டம்பர் 2023 அன்று ஐ-சிட்டி மால், ஷா ஆலத்தில் சிலாங்கூர் புரோபர்டீஸ் எக்ஸ்போவில் உரையாற்றும் போது,”2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நாங்கள் 45,000 (யூனிட்கள்) ஐ எட்டியுள்ளோம் என்றார்.

“பொருளாதார மீட்பு நிலை, மெதுவாக முன்னேற்றம் அடைந்தாலும், ரியல் எஸ்டேட் வாங்கும் மக்களின் திறனையும், குறிப்பாக மலிவு (RM250,000 மற்றும் அதற்கும் குறைவாக) விலை யூனிட்டுகளுக்கான தேவை அதிகம் உள்ளதால், அதை அதிகம் மேம்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

“2025-க்குள் 60,000 (யூனிட்கள்) அடைய முடியும் என்று நினைக்கிறேன். 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில், அனைத்து திட்டங்களும் சரியான இலக்கை நோக்கி செல்ல எதையும், தாமதமாகாமல் இருப்பதையும் உறுதிசெய்ய நாம் இன்னும் கொஞ்சம் தீவிரமாக செயல்பட வேண்டும்,” என்று சென்ட்ரல் ஐ-சிட்டியில் சிலாங்கூர் எக்ஸ்போவை ஆரம்பித்த பிறகு அவர் கூறினார்.

கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களைக் கையாள்வதற்காக விசேஷ குழுவொன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் தமது தரப்பு கவனித்து வருவதாக அமிருடின் கூறினார்.

இதற்கிடையில், சிலாங்கூர் வீட்டுவசதி மற்றும் ரியல் எஸ்டேட் வாரியம் கைவிடப்பட்ட திட்டங்களின் சிக்கல்களை மீட்டெடுக்க அல்லது தீர்க்கும் முயற்சிகளில் ஒரு உதவியாளராக மாறியுள்ளது என்று வீட்டு வசதி EXCO போர்ஹான் அமன் ஷா கூறினார்.

# வெள்ளத்தை எதிர்கொள்ள முன் ஏற்பாடு - அம்பாங் ஜெயா தொடங்கும்

**ஷா ஆலம்,** மீட்புப் பணியாளர்களுக்கு வெள்ளத்திற்கு முன் ஏற்பாடுகளில் பேரிடர் பயிற்சியை அம்பாங் ஜெயா நகராண்மை கழகம் (எம்பிஏஜே) நடத்தியது.

அண்மையில் லெம்பா ஜெயாவில் நடைபெற்ற பயிற்சியில் 156 விரைவு நடவடிக்கைக் குழுவின் (பான்டாஸ்) உறுப்பினர்கள் ஈடுபட்டதாக உள்ளூர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

"பயிற்சி மற்றும் உருவகப்படுத்துதல் தண்ணீரில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள், தண்ணீரில் சுய மீட்பு நுட்பங்கள் மற்றும் பாதுகாப்பு படகைக் கையாளுதல் ஆகியவை அடங்கும்.

"படகுகள், கயாக்ஸ், லாரிகள், நான்கு சக்கர வாகனங்கள், ட்ரோன்கள் மற்றும் கூடாரங்கள் போன்ற 100க்கும் மேற்பட்ட கருவிகளை எந்தவொரு பேரழிவையும் சமாளிக்க எம்பிஏஜே வழங்குகிறது," என்று அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

கீழ்காணும் இடங்களில் வெள்ளம் ஏற்பட்டால் 12 தற்காலிக தங்கும் மையங்கள் மற்றும் கட்டுப்பாட்டு மையங்களையும் எம்பிஏஜே ஏற்பாடு செய்துள்ளது :

- எம்பிஏஜே மண்டபம் (ஜாலான் பண்டான் இல்மு, பண்டான் இண்டா)
- டத்தோ அகமட் ரசாலி மண்டபம் (ஜாலான் பெசார் அம்பாங், அம்பாங்)
- AU2 மண்டபம் (ஜாலான் AU2A, தாமான் ஸ்ரீ கெராமட்)
- AU5 மண்டபம் (ஜாலான் AU5, தாமான் லெம்பா கெரமாட்)
- உகே பெர்டானா மண்டபம் (ஜாலான் பெர்சியாரான் செரிங் உகே 2, தாமான் உகே பெர்டானா)
- செரஸ் ஹர்தமாஸ் மண்டபம் (ஜாலான் செரஸ் ஹர்தமாஸ் 8 (பாயு மாஸ்) தாமான் புக்கிட் சேகார்)
- செம்பாக்கா மண்டபம் (ஜாலான் செம்பாக்கா 25, தாமான் செம்பாக்கா)
- செரஸ் பாரு மண்டபம் (ஜாலான் குவாரி, கம்போங். செரஸ் பாரு)
- தாசிக் தம்பஹான் மண்டபம் (ஜாலான் தாசிக் தம்பஹான் 3, கம்போங் தாசிக் தம்பஹான்)
- அம்பாங் ஜெயா மண்டபம் (ஜாலான் 1 தாமான் அம்பாங் ஜெயா)
- ஜாலான் எச், கம்போங் பண்டான்
- லெம்பா ஜெயா உத்தாரா (ஜாலான் புக்கிட் பெலாச்சான், தாமான் டேசா லெம்பா பெர்மாய்)



# அனைத்து மாவட்ட மன்ற மற்றும் நகராட்சி அதிகாரிகளுக்கு - வெள்ளத்தை எதிர் கொள்ளும் பயிற்சி

**ஷா ஆலம்,** வடகிழக்கு பருவமழை மாற்றத்தை தொடர்ந்து மாநிலத்தில் உள்ள அனைத்து உள்ளூர் அதிகாரிகளும் (பிபிடி) வெள்ள திடீர் தேவை சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்பு பயிற்சி உண்மையான சூழ்நிலையை எதிர்கொள்ளும் போது ஊழியர்கள் பீதியடையாமல் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது என்று உள்ளூர் அரசாங்கத்தின் எஸ்கோ தெரிவித்தார்.

"இந்த உருவகப்படுத்துதல் முக்கியமானது, ஏனென்றால் ஒரு இடர் ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முதலில் களத்தில் இறங்குபவர்களில் ஒருவராக அதிகாரிகள் உள்ளனர். மேலும், விரைவுப் படை மற்றும் மாநில பேரிடர் பிரிவு ஆகியவையும் தயார் நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"அனைத்து தேவைகள், குறிப்பாகக் கருவிகள் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்து, பயன்படுத்த முடியும்" என்று இங் சுய் லிம் கூறினார்.

முன்னதாக, வெள்ளத்தை சமாளிக்க 10,000 அடிப்படை உதவிப் பேக்கட்டுகள் தயார் செய்யப் பட்டுள்ளதாக டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, கூறினார்.

தீயணைப்புப் படை, ராணுவம் மற்றும் குடிமைத் தற்காப்புப் படை ஆகியவை நல்ல நிலையில் உள்ள இயந்திரங்களை வழங்குவதை உறுதி செய்யவும் மாநில அரசு கேட்டுக் கொண்டது.



# கடல் அரிப்பை தடுக்கும் அணை திட்டம் — கோலா லங்காட்

**ஷா ஆலம்,** கோலா லங்காட் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பல கடற்கரைகளில் ஏற்படும் அதிக அலைகளால் கடல் அரிப்பை தடுத்து அணை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அரிப்பை கட்டுப்படுத்தும் திட்டம் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தொடங்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

அத்திட்டத்தில் RM47.7 மில்லியன் மதிப்பீட்டில் கெலனாங் கடற்கரை, மோரிப் கடற்கரை, சுனாங் கடற்கரை, தஞ்சோங் சிப்பாட் கடற்கரை மற்றும் கேரி தீவு கடற்கரை ஆகியவை அடங்கும் என்று இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் நிக் நஸ்மி நிக் அஹ்மட் கூறினார்.

"இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் துறை (ஜேபிஎஸ்) மூலம் இந்த திட்டத்தை செயல்படுத்தும், அதற்கு இம்மாதம் டெண்டர் விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் அதன் பணிகள் 2024இன் தொடக்கத்தில் தொடங்கும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

"மேலும் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் கோலா லங்காட் பகுதியில் தீபகற்பத்தின் மேற்கு கடற்கரையில் 55,000 குடியிருப்பாளர்களை வெள்ளம் அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்காக அணையை உருவாக்கி மேம்படுத்துவதாகும்," என்றார்.

சதுப்புநில மரங்கள் போன்ற கடலோரச் செடிகளை நடுவது கடற்கரையை வலுப்படுத்துவதற்கும் அரிப்பைக் குறைப்பதற்கும் ஒரு வழி என்று நிக் நஸ்மி கூறினார்.

ஒருங்கிணைக்கப்பட்ட கரையோர மேலாண்மைத் திட்டத்தையும் (ISMP) அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது, இது நீண்ட கால கட்டமைப்பு சாராத நடவடிக்கையாகும், இது கரையோரத்தில் உள்ள உள்ளூர் காரணிகளைக் கருத்தில் கொண்டு அரிப்பைத் தொடர்ந்து கட்டுப்படுத்தவும், கடலோர வெள்ள அபாயத்தைக் குறைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தைத் தடுக்க குறுகியக் காலத் திட்டம்

**கிள்ளான்,** மேரு தொகுதியில் வெள்ளப் பிரச்சனைக்குத் தீர்வு காண குறுகிய காலத் திட்டத்தை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முன்னெடுத்துள்ளார்.



தொகுதியில் குறிப்பாக, வெள்ள அபாயம் உள்ள தாமான் டத்தோ பண்டார் குடியிருப்பு பகுதியில் கால்வாய்களை முறையாக பராமரிப்பதும் அந்த திட்டங்களில் அடங்கும் என்று மரியாம் அப்துல் ரஷிட் கூறினார்.

வெள்ளப் பிரச்சனைக்குத் தீர்வு காண விரும்புகிறேன். கடந்த வாரம் கூட சம்பந்தப்பட்ட துறையினருடன் சந்திப்பு நடத்தினேன். குறுகிய காலத் திட்டங்கள் வாயிலாக வெள்ளப் பிரச்சனைக்கு விரிவானத் தீர்வைக் காண்பதற்கு அக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

பல கால்வாய்கள் மரங்களால் சூழப்பட்டு நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, முக்கியத்துவம் அளிக்க வேண்டிய வெள்ள அபாயம் உள்ள இடங்களை நாங்கள் இப்போது பட்டியலிட்டு வருகிறோம். அடுத்தக் கட்ட நடவடிக்கைகாக இந்தப் பட்டியல் சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்கப்படும் என்றார் அவர்.

வெள்ளத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நான்கு வெள்ள நீர் சேகரிப்பு குளங்களின் நிர்மாணிப்பு குறித்து கருத்துரைத்த அவர், அப்பணிக்கு குத்தகையாளரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

இந்த திட்டத்தை மேற்கொள்வதற்கு தனியார் நிலங்களைக் கையகப் படுத்துது உள்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. இந்த வெள்ள நீர் சேகரிப்பு குளங்கள் அமைக்கப் பட்டவுடன் வெள்ளப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என நம்புகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

# டாக்டர் குணராஜ் ஜோர்ஜ்

## செந்தோசா தொகுதி சட்டமன்ற உறுப்பினர்



இருளை அகற்றுவது தீப ஒளி, குதுகலம் தருவதும் தீபாவளி பழையன கழிதலும் புதியன புகுதலையும் அவசியப் படுத்துவது தீபாவளி, நம்மை நாம் தூய்மை படுத்திக்கொண்டு புதுமைகளை ஏற்றுக்கொண்டு, காலத்திற்கு ஒப்ப வாழ கற்றுக்கொள்ள வேண்டும் புதுப்பித்தலை வாழ்நாள் முழுவதும் தவறாமல் செய்து கொண்டே இருக்க வேண்டும் தீபாவளி தினத்தில் புற தூய்மை மட்டுமின்றி அகத் தூய்மையும் பேன வேண்டும் தெளிந்த சிந்தனை நல் வாழ்விற்கு ஒளிதரும்.

ஒவ்வொரு ஆண்டும் நாம் தீபாவளியை மகிழ்ச்சியுடன் நண்பர்கள், உறவினரை மறவாமல் பல இன சகோதரர்களுடன் ஒன்றுப்பட்டு கொண்டாடுவது அவசியம். வீண் விரயத்தை தவிர்ப்போம், தீப ஒளியில் நம்பிக்கையின் பிழம்பில், துரோகம், ஊழல், அறியாமை போன்ற அனைத்து தீமைகளும் கருகட்டும்

ஆனந்தமான இந்நாளில் குடும்பம் மற்றும் சமூகத்தின் நலன் ஆரோக்கியம், மற்றும் சாலை பாதுகாப்பிலும் கவனம் வைப்போம்.

**அனைவருக்கும் என் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

# பிரகாஷ் சாம்புநாதன்

## கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர்



தீபத் திருவிழா மலேசியாவின் முக்கிய பண்டிகை இது இந்திய இந்து சமுகத்தில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது . இந்த திருவிழா நல்ல சக்திகளின் வெற்றியைக் குறிப்பது. தீமை மற்றும் இருளை அகற்றுதலின் அடையாளமாக, நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கை ஒளி திரும்புவதை தீபாவளி குறிக்கிறது.

கொவிட் 19, தொற்றால் நீண்ட காலம் பொது உபசரிப்புகளற்ற நிலையிலிருந்து இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை மாற்றம் காண்கிறது வரும் 12ம் தேதி கொண்டாடப்படவுள்ள தீபாவளி பண்டிகை.

தீபாவளி பண்டிகை சமயம் கலாச்சாரம் மற்றும் இனத்தின் எல்லைகளைக் கடந்து, ஒருவரை மற்றொருவர் மதித்து அனைவருக்கும் வாழ்த்து கூறி மகிழ்ச்சியாக கொண்டாடப்படும் பண்டிகை, வாருங்கள் அனைவரும் ஒன்றாக, ஒன்றுப்பட்டு தீபாவளியை கொண்டாடுவோம்.

கோத்தா கெமுனிங் மாநில சட்டமன்ற தொகுதி தீபாவளி நிகழ்வு வரும் 5ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. அன்று தாமான் ஸ்ரீ மூடா மற்றும் சுற்று வட்டார குடிமக்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ள அழைக்கிறேன். கோத்தா கெமுனிங் சமூகம் பல்வேறு மதங்களைச் சேர்ந்த பல்வேறு இனங்களை கொண்டுள்ளது. மொழி, கலாச்சாரம் மற்றும் ஒற்றுமை உணர்வில் பரஸ்பரம் மதித்து ஒத்துழைத்து அமைதியான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறோம்.

மகிழ்ச்சியாக உற்சாகமாக தீபாவளியை வரவேற்கும் நாம் உள்ளுக்குள் ஒற்றுமை உணர்வை கொண்டிருப்போம், விதைப்போம் பல்வேறு இனங்களின் மத்தியில் என்றும் தூய மதிப்புகளை வலியுறுத்துவோம்.

மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள் கூறிக்கொள்ளும் அதே வேளையில், சிலாங்கூரின் பல இன சமுதாயத்திற்கு இடையே உள்ள நெருக்கம் மற்றும் பிணைப்பு தொடர்ந்து மேலோங்கவும் சிலாங்கூர் டாருல் எஹ்சான் மாநிலத்தில் மக்கள் நல்வாழ்வை அடைய தொடர்ந்து பாடுப் படுவோம் என்றார்.

## அனைவருக்கும் எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



மலேசியா என்னும் திருநாட்டில்
இந்தியர்களின் உன்னத பண்டிகையாக
கருதப்படும் தீபாவளி திருநாளை அனைத்து
இன மக்களுடன் இணைந்து இனிதே
கொண்டாடுவோம். வேற்றுமை' மறந்து,மொழி
கடந்து, இனம் பாகுபாடுகள் இன்றி
அனைவரும் உற்சாகத்துடனும்
ஆனந்தத்துடன் இவ்வருட
தீபாவளியை வரவேற்போம்.
பாதுகாப்புடனும் சமய
நெறிகளுடன் நமது
பண்டிகையை வரவேற்பதும்
அடுத்த தலைமுறைக்கு
அதனை கொண்டு சேர்ப்பதும்
நமது கடமைகளில்
ஒன்றாகும் என்பதை நாம்
அனைவரும் நினைவில்
வைத்துக்கொள்ள
வேண்டும் என்பதே என்
வேண்டுகோள்.
நம் கண்ணில் படும்
வசதி குறைந்தவர்களுக்கு
நம்மால் முடிந்த சிறு
உதவிகளையோ, பலகாரங்கள்,
புத்தாடைகள் வாங்கி கொடுத்து
அவர்களையும் மகிழ்ச்சியாக்கி
நாமும் மகிழ்ச்சியுடன் இவ்வருட
தீபாவளியை இன்முகத்துடன்
வரவேற்போம்.

நல்லுள்ளத்தை அகல் ஆக்கி
அன்பு என்பதை எண்ணையாக்கி
மகிழ்ச்சியை தீபமாக ஏற்றி
வருடத்தில் ஒரு நாள்
வாழ்வில் ஒளி ஏற்றும் திருநாள்
இனிதே கொண்டாடுவோம்
இனிய தீபாவளி திருநாளை.

அன்புடன்
மாண்புமிகு பாப்பாராய்டு
சிலாங்கூர் மாநில ஆட்சி குழு உறுப்பினர்
மற்றும் பந்திங் சட்டமன்ற உறுப்பினர்.

# வீ. கணபதிராவ்

## கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர்



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இத்தீபாவளி பண்டிகையில், நம் வாழ்வில் வரவிருக்கும் ஒளியையும் நம்பிக்கையையும் கொண்டாடுவோம்.

இப்பண்டிகை நம் வாழ்வில் மகிழ்ச்சியையும், வெற்றியையும், அன்பையும் நிரப்பட்டும். புனிதமான தீபாவளிப் பண்டிகையை பல இன மலேசியர்களின் ஒற்றுமையின் அடையாளமாக்குவோம்.

இனம், மதம், அரசியல் என்ற பேதங்களை கடந்து, அன்பின் பந்தத்தில் இணைவோம். ஒற்றுமையின் ஒளி என்றும் நம் இதயங்களில் என்றும் பிரகாசிக்கட்டும்.

**எங்கள் அன்புக்குரிய மலேசியர்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

# இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

# தேர்ந்தெடுக்கப்பட்டப் போக்குவரத்துக் குற்றங்களுக்கு வெ.10.00 அபராதம்

**ஷா ஆலம்,** தேர்ந்தெடுக்கப்பட்ட போக்குவரத்து குற்றங்களுக்கு முழுமையானதீர்வை வழங்கும் வகையில் 10.00 வெள்ளி என்ற சமநிலையான அபராதச் சலுகையை சுபாங் ஜெயா மாநகர் மன்றம் வழங்குகிறது.

மாநகர் மன்றத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அக்டோபர் 1 முதல் டிசம்பர் 31 வரை இந்தச் சலுகை வழங்கப்படுவதாக மாநகர் மன்றம் தனது முகநூல் பதிவில் கூறியது.

போஸ்டரில் இடம் பெற்றுள்ள குற்றங்களைத் தவிர இதர போக்குவரத்துக் குற்றங்களுக்கான அபராதத்தைச் செலுத்தும் அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள் என்று அது தெரிவித்தது.

தடைசெய்யப்பட்ட நேரங்கள் மற்றும் பகுதிகளில் கனரக வாகனங்களை ஓட்டியது, அமலாக்க அதிகாரிகளால் வாகனங்கள் இழுத்துச் செல்லப்பட்டது மற்றும் செயல்படாத அல்லது கைவிடப்பட்ட வாகனங்கள் மீதான நடவடிக்கைகள் உள்ளிட்ட குற்றங்களுக்கு இந்த நிலையான 10.00 வெள்ளி அபராதம் பொருந்தாது.

அதோடு மட்டுமின்றி, மாற்றுத்திற-னாளிகளுக்கான சிறப்பு வாகன நிறுத்துமிடங்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களை பழுது பார்த்தல் அல்லது கழுவுதல் ஆகியவை குற்றங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படாது.

இது தவிர, அனுமதிக்கப்படாத இடங்களில் வாகனங்களை நிறுத்துவது, மற்ற வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்துவது போன்றக் குற்றங்களுக்கும் இந்த சலுகைத் திட்டத்தில்வாய்ப்புவழங்கப்படவில்லை.

இந்த சலுகை தொடர்பான மேல் விவரங்களுக்கு www.mbsj.gov.my என்ற இணையதளத்தைப் வலம் வரலாம்.



# வீட்டின் முன்புறம் மேற்கொள்ளப்படும் சாலை பணிகளுக்கு கட்டணம் இல்லை

**ஷா ஆலம்,** குடியிருப்பு பகுதிகளில் நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களால் வீட்டின் வெளிபுறத்தில் மேற்கொள்ளப்படும் சாலை மேம்பாட்டு பணிகளுக்கு வீட்டு உரிமையாளர்களிடம் பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி (எம்பிபிஜே) கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை. வெளி ஒப்பந்ததாரர்கள் குடியிருப்பாளர்களிடம் பணம் கேட்பது தொடர்பான புகார்களைப் பெட்டாலிங் ஜெயா மாநகராட்சி பெற்றுள்ளது.

எம்.பி.பி.ஜே பெயரைப் பயன்படுத்தி பொறுப்பற்ற தரப்பினர் சாலை அமைக்கும் பணிக்காக ஏதேனும் பணம் கேட்டால் பொதுமக்கள் புகார் அளிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குடியிருப்பாளர்கள் **03-7954 2020** என்ற புகார் எண் மூலமாகவோ அல்லது மேல் நடவடிக்கைக்கு aduan@mbpj.gov.my மின்னஞ்சல் மூலமாகவோ புகார் அளிக்கலாம். அதுமட்டுமில்லாமல், காவல்துறை அல்லது எம்.பி.பி.ஜே புகார் பிரிவவில் நேரடியாகவும் புகார் தெரிவிக்கலாம்.




# போர்ட் கிள்ளான் சாலையைப் பராமரிக்க 50 மில்லியன் ரிங்கிட் மானியம்

**ஷா ஆலம்,** போர்ட் கிள்ளான் சாலையைப் பராமரிக்க, அதிக சுமை வரம்பை அமல்படுத்துவதற்கு 50 மில்லியன் ரிங்கிட் மானியமாக அரசாங்கம் வழங்குகிறது.

கிள்ளான் துறைமுக வாரியத்துடன் இணைந்து, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப போக்குவரத்து மற்றும் தளவாட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், அதிக முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

“இது வர்த்தக நடவடிக்கைகளைத் தூண்டும். சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நாட்டின் துறைமுகங்களின் செயல்திறனை வலுப்படுத்துவதுடன், கேரி தீவில் உள்ள துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட மேம்பாடு, போர்ட் கிள்ளானின் பங்கை மேலும் வலுப்படுத்துவதற்கான கோரிக்கையின் (RFP) மூலம் நிறைவேற்றப்படும்.

பல்வேறு அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த டிஜிட்டல் போர்டல் மூலம் துறைமுகத்தில் உள்ள வர்த்தக சமூகத்தை ஒன்றிணைக்கும் வகையில் மலேசியா கடல்சார் ஒற்றைச் சாளர (MMSW) அமைப்பை மேம்படுத்த மானியமாக RM20 மில்லியன் வழங்கப்பட்டது,” என்று அவர் பட்ஜெட் 2024ஐ சமர்ப்பித்த போது கூறினார்.

# ஊராட்சி மன்ற விதிகளைப் பின்பற்றி நடப்பீர்



**ஷா ஆலம்,** தங்களின் வர்த்தக வளாகங்கள் எப்போதும் தூய்மையுடன் இருப்பதை உறுதி செய்யும்படிஉணவகங்கள்மற்றும் உணவு விற்னையாளர்களை பலாக்கோங் சட்டமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.

ஊராட்சி மன்றங்கள் நிர்ணயித்துள்ளபடி எண்ணெய் கால்வாய்களில் கலப்பதை தடுக்கும் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று ஓங் சுன் வேய் கூறினார்.

வர்த்தக லைசென்ஸ் பெறுவதற்கான நிபந்தனைகளில் எண்ணெய் தடுப்பு சாதனங்களைப் பொருத்துவதும் ஒன்றாகும். ஆகவே, காஜாங் நகராண்மைக் கழகத்தின் இந்த நிபந்தனையை பின்பற்றி நடக்கும்படி உணவக உரிமையாளர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என்றார் அவர்.

இம்மாதம் 3ஆம் தேதி காஜாங், தாமான் பெர்ஜெயா மற்றும் கம்போங்பாருசுங்கைசுவாஆகிய பகுதிகளுக்கு தாம் மேற்கொண்ட வருகையின் போது உணவுக் கழிவுகள் மற்றும் எண்ணெய்க் கசடுகளால் கால்வாய்கள் அடைபட்டுள்ளதைக் கண்டதாக அவர் தெரிவித்தார்.

கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் தொடர்ச்சியாக கால்வாய்களைச் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டு வந்த போதிலும் தூய்மையைப் பராமரிப்பதில் பொது மக்களும் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.



# கம்போங் ஜாவா பகுதியில் கால்வாய் நிர்மாணிப்பு

**கிள்ளான்,** இங்குள்ள கம்போங் ஜாவா சாலையில் கால்வாய் நிர்மாணிப்பு பணிகளை விரைவுபடுத்தும்படி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் உத்தரவிட்டுள்ளார்.

ஆண்டு இறுதியில் மழைகாலம் தொடங்கும் சாத்தியம் உள்ள நிலையில் கால்வாய் நிர்மாணிப்பு பணிகள் இன்னும் முழுமை பெறாதது குறித்து அவர் ஏமாற்றம் தெரிவித்தார்.

இதன் தொடர்பில் பொது மக்களிடமிருந்து புகார் கிடைத்தைத் தொடர்ந்து ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் பொறியியல் துறை அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட பகுதியை குணராஜ் அண்மையில் பார்வையிட்டார்.

இங்கு கால்வாய்களை அமைக்கும் பணி சில இடங்களில் இன்னும் பூர்த்தி செய்யப்படாமலிருப்பதை மாநகர் மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த அவர், இப்பணிகள் விரைவில் பூர்த்தி செய்யப்படுவதை மாநகர் மன்றம் உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த கால்வாய் நிர்மாணிப்பு பணிகளை விரைந்து மேற்கொள்வதன் மூலம் இப்பகுதியில் வெள்ளம் ஏற்படும் சாத்தியத்தை தவிர்க்க இயலும் என்றும் அவர் சொன்னார்.

மேலும், அந்த பகுதியில் காணப்படும் அடர்த்தியான புதர்களை அப்புறப்படுத்தி சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் அவர் மாநகர் மன்றத்தை வலியுறுத்தினார்

# புக்கிட் கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர்- மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்



**ஷா ஆலம்,** இங்குள்ள புக்கிட் கெமுனிங் எட்டாவது மைலில் உள்ள லோட் நிலக் குடியிருப்புகளுக்குக் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் சம்புநாதன் நேற்று வருகை மேற்கொண்டு குடியிருப்பாளர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இந்த லோட் நிலங்களில் காணப்படும் பழுதடைந்த சாலைகள், புதர்களால் மூடப்பட்ட வடிகால்கள், முறையாக அகற்றப்படாதக் குப்பைகள், எரியாத சாலை விளக்குள் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காணும் நோக்கில் அவர் இந்த வருகையை மேற்கொண்டார்.

கம்போங் புக்கிட் கெமுனிங் நடவடிக்கைக் குழுவின் தலைவர் பொன் சந்திரன் இந்த கள ஆய்வுக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர் ஷாகிர் மற்றும் இந்திய சமூகத் தலைவர் பத்மநபான் ஆகியோரும் சட்டமன்ற உறுப்பினரோடு உடன் வந்திருந்தனர்.

இதனிடையே, தங்களின் வேண்டுகோளை ஏற்று புக்கிட் கெமுனிங் வட்டாரத்தில் நிலவும் பிரச்சனைகளை நேரில் கண்டறிய வருகை தந்த சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் அவர்களுக்கு தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக பொன். சந்திரன் கூறினார்.

சட்டமன்ற உறுப்பினரின் முயற்சியால் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் இப்பகுதியில் நிலவும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும் எனத் தாங்கள் பெரிதும் எதிர்பார்ப்பதாக முன்னாள் இந்திய சமூகத் தலைவருமான அவர் சொன்னார்.

# கட்டணம் செலுத்த முடியாத மாணவர்களை நிராகரிக்க வேண்டாம்



**புத்ராஜெயா,** வறுமை காரணமாக உயர்கல்விக் கட்டணம் செலுத்த முடியாத நிலையிலிருக்கும் மாணவர்களுக்கு நுழைவு அனுமதியை மறுக்க வேண்டாம் என் அரசாங்க உயர்கல்விக் கூடங்களுக்கு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் உத்தரவிட்டுள்ளார்.

ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் உயர்கல்விப் பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார்.

எந்த அரசாங்கப் பல்கலைக்கழகமும் ஏழை மாணவர்களுக்கு நுழைவு அனுமதியை மறுக்கக் கூடாது என நான் விரும்புகிறேன். அவர்களை முதலில் பதிவு செய்ய அனுமதிக்க வேண்டும். கட்டணம் தொடர்பான விவகாரங்களை சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைச்சு பின்னர் தீர்க்கும் என்றார் அவர்.

வரலாற்றில் இதுவே முதல் தடவையாக, ஏழைகளாகவும் பொருளாதார வசதியில்லாதவர்களாகவும் இருக்கும் எங்கும், எந்த இனத்தையும் சேர்ந்த எங்கள் பிள்ளைகள் உயர்கல்விக் கூடத்தில் கல்வி அனுமதி மறுக்கப்படக் கூடாது. அவர்கள் பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றார் அவர்.

நுழைவுக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால் அம்பாங் மற்றும் தம்புனைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர அனுமதி மறுக்கப்பட்டதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என அவர் சொன்னார்.

அவர்கள் பதிவு செய்வதை தடுக்கக் கூடாது. அவர்கள் பாடங்களுக்கான பதிவை முடித்தப் பின்னர் கட்டணத்தைச் செலுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

# கல்வியை பாதியில் கைவிடும் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது



**கோலாலம்பூர்,** கல்வியை பாதியில் கைவிடும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த 2019 மற்றும் 2022க்கும் இடையே குறைந்து வருவதாக துணைக் கல்வியமைச்சர் லிம் ஹுய் யிங் கூறினார்.

ஆரம்பப் பள்ளிகளில் கடந்த 2019ஆம் ஆண்டு 0.12 விழுக்காடாக இருந்த கல்வியைப் பாதியில் கைவிடும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்தாண்டில் 0.7 விழுக்காடு குறைந்துள்ளதாக அவர் சொன்னார்.

அதே வேளையில் இடைநிலைப்பள்ளிகளில் கடந்த 2019ஆம் ஆண்டு 1.14 விழுக்காடாக இருந்த இந்த எண்ணிக்கை கடந்தாண்டு 0.99 விழுக்காடாக சரிவு கண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 2019 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளில் இரண்டாம், மூன்றாம் நான்காம் மற்றும் ஆறாம் ஆண்டு மாணவர்கள் மத்தியில் கல்வியைப் பாதியில் கைவிடும் போக்கு சற்று உயர்ந்து காணப்பட்ட வேளையில் இரண்டாம் மற்றும் ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் மத்தியில் குறைந்து காணப்பட்டது என்றார் அவர்.

இடைநிலைப்பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரை கடந்த 2019 முதல் 2022 வரை இரண்டாம் படிவ மாணவர்கள் மத்தியில் கல்வியை கைவிடும் போக்கு அதிகரித்தது. அதேசமயம் படிவம் மூன்று, நான்கு மற்றும் ஐந்து மாணவர்கள் மத்தியில் இந்த எண்ணிக்கை சரிவைப் பதிவு செய்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று பெட்டாலிங் ஜெயா தொகுதி பக்கத்தான் ஹராப்பான் உறுப்பினர் லீ சியேன் சுங் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த 2019 முதல் 2023 வரை கல்வியை பாதியில் கைவிட்ட மாணவர்களின் எண்ணிக்கை, வயது மற்றும் பாலினம் குறித்த தகவல்களை வெளியிடும் அதேவேளையில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்குமாறு லீ கல்வியமைச்சை கேட்டுக் கொண்டார்.

# ஒற்றுமை அரசின் 2024 வரவு செலவுத் திட்டம் 39,380 கோடி வெள்ளி ஒதுக்கீடு ஒதுக்கீடு

**ஷா ஆலம்,** மொத்தம் 39,380 கோடி வெள்ளி நிதியை உள்ளடக்கிய 2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.9 விழுக்காடாக விளங்குகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீட்டை பெற்ற அமைச்சுக்களில் நிதி அமைச்சு, கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவை முன்னிலை வகிக்கின்றன.

அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 39,380 கோடி வெள்ளியில் 77.1 விழுக்காடு அல்லது 30,380 கோடி வெள்ளி நிர்வாகச் செலவினங்களுக்கும் எஞ்சிய 9,000 கோடி வெள்ளி மேம்பாட்டுச் செலவினங்களுக்கு பயன்படுத்தப்படும்.

அடுத்தாண்டில் சேவை வரி 8 விழுக்காடாக அதிகரிக்கப்படும் அடுத்தாண்டு தொடங்கி நாட்டில் சேவை வரி இரு விழுக்காடு அதிகரித்து எட்டு விழுக்காடாக உயர்த்தப்படும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையினால் மக்களுக்கு சுமை ஏற்படாமல் இருப்பது உறுதி செய்வதற்காக உணவு, பானங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளுக்கு வரி விலக்களிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

வரி விதிப்புக்கு உட்பட்ட சேவைகளின் வரையறையை சரக்கு போக்குவரத்து, தரகு, ஏற்பாட்டு ஆதரவு மற்றும் கரவோக்கே ஆகியவற்றுக்கும் அரசாங்கம் விரிவுபடுத்தும் என்று கடந்த மாதம் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் தெரிவித்தார்.

மக்களுக்கு சிறப்பான சேவைகளையும் உதவித் திட்டங்களை அமல்படுத்துவதற்கு ஏதுவாக வருமானத்தைப் அதிகரிப்பதற்கு அரசாங்கம் அமல்படுத்தியுள்ள சில வரி சீர்திருத்தங்களில் இவையும் அடங்கும் என அவர் குறிப்பிட்டார்.

எதிர் வரும் மார்ச் மாதம் 1ஆம் தேதி தொடங்கி பத்து விழுக்காடு நிகர லாப அடிப்படையில் பட்டியலிடப்படாத பங்குகளை விற்பனை செய்யும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு மூலதன ஆதாய வரியை விதிப்பதற்கு புத்ராஜெயா இணக்கம் தெரிவித்துள்ளது என்றார் அவர்.

## அடுத்தாண்டில் அரசாங்கத்தின் வருமானம் 1.5 விழுக்காடு அதிகரித்து 30,760 கோடி வெள்ளியை எட்டும்

**ஷா ஆலம்,** வரும் 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் 1.5 விழுக்காடு அதிகரித்து 30,760 கோடி வெள்ளியாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.5 விழுக்காடாக ஏற்றம் காணும் என நிதியமைச்சு கணித்துள்ளது.

வரி வசூலிப்பு அதிகரிப்பின் வாயிலாக இந்த வருமான உயர்வு சாத்தியமாகும் என 2024 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வருவாய் மதிப்பீட்டு அறிக்கை கூறியது.

வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் கடந்தாண்டை விட 6.4 விழுக்காடு அதிகரித்து 24,360 கோடி வெள்ளியாக உயர்வு காணும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டின் மொத்த வருமானத்தில் 79.2 விழுக்காடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.3 விழுக்காடாகவும் இருக்கும் என அந்த அறிக்கை குறிப்பிட்டது.

கூடுதல் வரி வசூலிப்பு க்கு பொருளாதார வளர்ச்சி பெரிதும் துணை புரியும். வரித் தள விரிவாக்கம், வரி வசூலிப்பு முறையில் மேம்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவையும் வருமான அதிகரிப்பை ஊக்குவிக்கும் என்று அது தெரிவித்தது.




## 2024 பட்ஜெட்டில் மித்ராவுக்கு வெ.10 கோடி, வழிபாட்டு தலங்களுக்கு வெ.5 கோடி, தெக்குன் 3 கோடி வெள்ளி

**ஷா ஆலம்,** பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தாக்கல் செய்த பட்ஜெட் அனைத்து இனங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் என்று மனித வள அமைச்சர் வ. சிவகுமார் தெரிவித்தார்.

இந்திய சமுதாயத்தின் பொருளாதார மேம்பாடு உருமாற்ற திட்டம் என்று கூறப்படும் மித்ராவுக்கு 10 கோடி வெள்ளி மீண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. TEKUN (தெக்குன்) எனப்படும் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட சிறுதொழில் கடனுதவி திட்டத்திற்கு 3 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் இஸ்லாம் அல்லாத வழிபாட்டு தலங்களுக்கு இரண்டாவது முறையாக பட்ஜெட்டில் ஐந்து கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கக் கூடியது என்று அமைச்சர் சிவகுமார் சொன்னார்.

வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் அதிக முக்கியத்துவம் வழங்கப் பட்டுள்ளது.கல்வி மேம்பாடு தொழில் துறை, உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் இது அனைத்து இனங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பட்ஜெட் என்று அவர் சொன்னார்

**SELANGOR INDRU**
Sidang pengarang
**PENASIHAT**
Lembaga Editorial MSSB
**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar
**KETUA PENGARANG**
A.Pakiyanathan
**PENOLONG PENGARANG**
Rajah Ramaya
**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan
**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof
**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**
*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

## பட்ஜெட்டில் திவாலானவர்களுக்கு இரண்டாவது வாய்ப்பு அடுத்த ஆண்டு

**ஷா ஆலம்,** மக்களின் நலனை பாதுகாப்பதற்கான ஒற்றுமை அரசாங்கத்தின் கொள்கையின்படி, திவாலானவர்களுக்கு மறு வாய்ப்பு வழக்கும் கொள்கை அடுத்த ஆண்டு முதல் RM200,000 கடனைத் தாண்டாத 40 வயதுக்கு குறைவான இளைஞர்களுக்கு விரிவு படுத்தப் படும்.

கடந்த ஜூலை மாதம் வரை, 50,000 ரிங்கிட் க்கும் குறைவான சிறு கடன்களுடன் கிட்டத்தட்ட 14,000 திவாலான வழக்குகள் உள்ள நிலையில் இருந்து விடுவிக்க பட்டுள்ளது என பிரதமர் தெரிவித்தார்.

## அனைத்துலக நிதி நிலையை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச வரியை அமுல்படுத்தும்

**ஷா ஆலம்,** தொழில்துறையினரின் கருத்துக்களையும் சமீபத்திய சர்வதேச நிதி நிலை முன்னேற்றங் களையும் கருத்தில் கொண்டு, அரசாங்கம் 2025 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச வரி விதிப்பை அமல்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

“மலேசியா சர்வதேச வரிவிதிப்பு தரங்களை கடைபிடிக்க வேண்டும், குறிப்பாக அதிகப் படியான வரி விதிப்பு நடவடிக்கைகள் சர்வதேச நிறுவனங்களை, குறைந்த வரி விதிப்பு கொண்ட நாடுகளுக்கு முதலீட்டை மாற்றுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

## அரிசியைப் பதுக்கினால் சட்ட நடவடிக்கை – பிரதமர் எச்சரிக்கை

**ஷா ஆலம்,** நாட்டில் அரிசியைப் பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் தரப்பினர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எச்சரித்துள்ளார்.

இவ்விவகாரம் மீது அமலாக்கத் தரப்பினர் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு குற்றமிழை போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் படி விவசாய மற்றும் உணவு உத்தரவாதத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ முகமது சாபுவை தாம் பணித்துள்ளதாக அவர் சொன்னார்.

அரிசி மக்களின் பிரச்சனையாக உள்ளது. இந்தோனேசிய அதிபர் ஜோக்கோவியும் அரிசி விலை உயர்வை அறிவித்துள்ளார். காரணம், அரிசியை ஏற்றுமதி செய்யும் 18 நாடுகள் அதன் ஏற்றுமதியை நிறுத்தியுள்ளன அல்லது குறைத்துள்ளன. இதனால் தேவை மற்றும் விநியோகத்தில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டுக்கு 8 பில்லியன் ரிங்கிட் கடன் நிதி

**ஷா ஆலம்,** சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (எஸ்எம்இ) ஆதரவளிக்க பேங்க் நெகாரா மலேசியா (பிஎன்எம்) கீழ் மொத்தம் 8 பில்லியன் ரிங்கிட் கடன் நிதி அளிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

மேலும், 600 மில்லியன் ரிங்கிட் குறிப்பாகக் குறுந்தொழில் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட தொழில்முனைவோர், சிறு ஒப்பந்ததாரர்கள், நிலைத்தன்மை நடைமுறைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான துறைகளுக்கு உதவுவதற்காக இந்த தொகையை அவர் குறிப்பிட்டார்.

"2024 ஆம் ஆண்டில், தேசிய கருவூல தாக்க நிதியின் கீழ் RM600 மில்லியன் வழங்கப் பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும், கிராமப்புற, பாதி நகர்ப்புற சமூகங்கள் மற்றும் நிதிச் சேவைகள் குறைவாக உள்ளவர்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கவும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது," என்று மலேசிய மடாணி பட்ஜெட்டை தாக்கல் செய்த போது அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு 1 டன் அரிசிக்கு வெ1,700 வழங்கப்படுகிறது

**ஷா ஆலம்,** அரசாங்கம் ஒரு டன் அரிசிக்கு 500 ரிங்கிட் மானியம் வழங்கி வருவதால், விவசாயிகள் தங்கள் அரிசியின் விற்பனை விலையில் ஒரு டன்னுக்கு ரிங்கிட் 1,700 பெறுகின்றனர் என்று விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் சாபு தெரிவித்தார்.

நெல் விவசாயிகளுக்கு டன்னுக்கு 500 ரிங்கிட் என்ற அரிசி விலை மானியத் திட்டத்தின் ஊக்கத் தொகை தொடரும் என்றும், 2014 ஆம் ஆண்டு முதல் டன்னுக்கு 1,200 ரிங்கிட் என்ற விகிதத்தில் உற்பத்தியாளர்கள் அரிசி கொள்முதல் செய்வதற்கான அடிப்படை விலையை மட்டுமே அரசாங்கம் நிர்ணயம் செய்யும் என்றும் அவர் கூறினார்.

"அதாவது அரிசியின் குறைந்தபட்ச கொள்முதல் விலையை மட்டும் அரசாங்கம் நிர்ணயம் செய்கிறது, அதே நேரத்தில் உற்பத்தியாளர்கள் தங்கள் சொந்த கொள்முதல் விலையை நிர்ணயிக்கலாம். ஆனால் அது நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலையை விட குறைவாக இருக்கக் கூடாது.

"இருப்பினும், அரசாங்கம் இன்னும் அரிசி விலை மானியத்திட்டத்தில் நெல் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு RM500 ஊக்கத் தொகையை வழங்குகிறது மற்றும் அரிசி விலையில் அடிப்படையை நிர்ணயித்தாலும் ஒவ்வொரு நெல் விவசாயிக்கும் டன்னுக்கு RM1,700 கிடைக்கும்," என்று அவர் பெர்னாமாவிடம் கூறினார்.

## மடாணி பொருளாதார கட்டமைப்பு விரிவானது, நடப்புச் சூழலுக்கு ஏற்றது

**ஷா ஆலம்,** விரிவான அமலாக்க கட்டமைப்பையும் நடப்பு பொருளாதார சூழலுக்கு ஏற்ற வகையிலும் உள்ள காரணத்தால் 2030 கூட்டு வளப்ப தொலைநோக்கு கொள்கைக்கு மாற்றாக மடாணி பொருளாதாரத்தை அரசாங்கம் அமல் படுத்தியுள்ளதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

முன்பு அமல்படுத்தப்பட்டிருந்த WKB-2030 எனப்படும் அந்த கொள்கை நிர்வாக முறை விவகாரத்தை வலியுறுத்தவும் நடப்பு பொருளாதாரச் சூழலுக்கு ஏற்பவும் அமையவில்லை என்று அவர் சொன்னார்.

டபள்யூ.கே.பி. 2030 உலகளாவிய கட்டமைப்பாக மட்டும் விளங்கியது. எனினும், வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு போன்ற நடப்பு பிரச்சனைகள் மீது கவனம் செலுத்தாது உள்ளிட்ட சில குறைபாடுகளை அது கொண்டிருந்தது என அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த கொள்கையானது, நம்மிடம் இருப்பது என்ன?, எவ்வளவு கடன் உள்ளது? அரசாங்கம் சுமக்கும் நிதி பற்றாக்குறை போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தவில்லை. ஆகவே, தற்போதைய திட்டங்களில் இந்த அம்சங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்காலச் சந்ததியினரை மனதில் கொண்டு எந்த திட்டத்தையும் வகுக்கும் போது மேற்கத்திய மாதிரியின் மயக்கும் வார்த்தைகளால் திருப்தி அடைந்து விடக்கூடாது. மாறாக நமது சித்தாந்தங்கள் மற்றும் பண்புகளைக் கொண்டு உள்நாட்டு மதிப்புக் கூறுகளையும் வலிமையையும் பெற்றிருக்க வேண்டும் என அவர் சொன்னார்.

மக்களவையில் இன்று மடாணி பொருளாதாரத்திற்கும் WKB-2030 கொள்கைக்கும் இடையிலான வேறுபாடு குறித்து பூலாய் தொகுதி பக்கத்தான் ஹராப்பான் உறுப்பினர் சுஹைஸான் கையாட் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



## 2024 பட்ஜெட்- வெள்ளத் தடுப்பு திட்டங்களுக்கு 1,180 கோடி வெள்ளி ஒதுக்கீடு

**கோலாலம்பூர்,** நாடு முழுவதும் வெள்ளத் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்ள 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 1,180 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிலாங்கூரில் மேற்கொள்ளப் படும் 2 ஆம் கட்ட சுங்கை லங்காட் வெள்ளத் தணிப்புத் திட்டமும் அதில் அடங்கும்.

மக்களைப் பாதுகாப்பதற்கும் உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் பேரழிவு ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஏதுவாக வெள்ளத் தடுப்பு திட்டங்கள் துரித கதியில் மேற் கொள்ளப் படவுள்ளதாக நாடாளுமன்றத்தில் இன்று 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது தெரிவித்தார்.

பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தில் வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு 2,200 கோடி வெள்ளி பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வேளையில் இந்த 1,180 கோடி வெள்ளி ஒதுக்கீடு அதனுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த 1,180 கோடி வெள்ளி நிதியில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த 33 வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் வரும் ஆண்டுகளில் அமல்படுத்தப்படும் என அவர் சொன்னார்.

அவற்றில் 510 கோடி வெள்ளி மதிப்புள்ள 24 திட்டங்களுக்கான பணி ஏற்பு கடிதங்கள் இவ்வாண்டு அக்டோபர் மாதம் தொடங்கி வெளியிடப்படும். எஞ்சியப் பணிகளுக்கான கடிதங்கள் வரும் 2024 முதல் காலாண்டில் வழங்கப்படும் என்றார் அவர்.

அந்த 33 வெள்ளத் தடுப்புத் திட்டங்களில் சுங்கை லங்காட் இரண்டாம் கட்ட வெள்ளத் தடுப்புத் திட்டம், பகாங் மாநிலத்தின் சுங்கை பகாங், நெகிரி செம்பிலான் மாநிலத்தின் கோல பிலாவிலுள்ள சுங்கை ஜெலாய் ஆற்றுப் படுகைத் திட்டங்களும் அடங்கும் என அவர் தெரிவித்தார்.

# எக்ஸ் நோய் பரவல் சாத்தியத்தை எதிர்கொள்ள முழு தயார் நிலையில் சுகாதார அமைச்சு



**ஷா ஆலம்,** நாட்டில் எக்ஸ் நோய் பரவல் குறித்து சுகாதார அமைச்சு விழிப்பு நிலையில் உள்ளது அதனைச் சமாளிக்க முழு அளவிலான தயார் நிலையைக் கொண்டுள்ளது என்று சுகாதார துறை தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் முகமது ராட்ஸி அபு ஹாசன் கூறினார்.

இந்த நோயைப் பற்றி பொதுமக்கள் அதிகம் கவலைப்பட வேண்டாம் என்று நேற்று இங்கு நடைபெற்ற மலேசிய உணவு வழிகாட்டி தொடர் மற்றும் 'பெண்களுக்கான ஆரோக்கிய உணவு' எனும் நிகழ்வின் தொடக்க விழாவிற்கு பிறகு இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 76வது மாநாட்டில் இந்த எக்ஸ் நோய் முக்கிய விவாதப் பொருளாக விளங்காவிட்டாலும் இந்த நோய் வரக்கூடிய சாத்தியம் குறித்து மலேசியா எச்சரிக்கையாக உள்ளது.

நோயைச் சமாளிப்பதற்கு ஏதுவாக மலேசிய சுகாதாரத்துறை எப்போதும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் நோய்த் தொற்றுகள் பற்றிய தகவல்கள் எப்போதும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய நிலையில் தொற்று நோயை ஏற்படுத்தும் திறன் கொண்ட அறியப்படாத ஒரு நோய்க்கிருமிக்கு (எக்ஸ் நோய் ) என உலக சுகாதார அமைப்பு (WHO) கடந்த 2018ல் பெயரிட்டது.

எக்ஸ் நோயின் தன்மை மற்றும் பாதிப்பு குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை என்றாலும் நோயின் தாக்கம் குறித்து சுகாதார நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# 6 தமிழ்ப்பள்ளிகளை காப்பாற்றும் முயற்சி கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படும்!



**ஷா ஆலம்,** பத்துக்கும் குறைவான மாணவர்களை கொண்டிருக்கும் 26 தமிழ்ப் பள்ளிகளை இடம் மாற்றம் செய்யும் பணி கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் என்று மனிதவள அமைச்சர் வ சிவகுமார் தெரிவித்தார்.

இந்தியர்கள் அதிகம் வாழும் இடங்களில் இந்த பள்ளிகளை இடம் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக கல்வி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட பள்ளி தரப்பிடம் முறையாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இடமாற்றம் செய்யப்படும் பள்ளிகளுக்கு முதலில் நிலங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் உட்பட இந்திய ஆட்சிக் குழு உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றார் அவர்.

# மோசடிக்கு எதிரான போராட்டத்திற்கு அரசாங்கம் RM10 மில்லியன் கூடுதல் ஒதுக்கீடு செய்துள்ளது

**ஷா ஆலம்,** மோசடி குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் அதன் செயல்பாட்டை மேலும் அதிகரிக்க, தேசிய மோசடி மறுமொழி மையத்தின் (NSRC) ஒதுக்கீட்டை, RM20 மில்லியனாக அரசாங்கம் உயர்த்தும் என்றார் நிதி அமைச்சராகவும் இருக்கும் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார்.

"பேங்க் நெகாரா மலேசியா நிதித் துறையுடன் இணைந்து தேசிய மோசடி தடுப்பு போர்ட்டலை (NFP) உருவாக்கி வருகிறது, இது 2024 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதன்வழி, நிதி கண்காணிப்பு தானியங்கு படுத்தும் திறனுடன், போர்ட்டல் கண்காணிப்பு, முடக்கம் மற்றும் நிதி திரும்பப் பெறும் காலத்தை விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அன்வார் கூறினார்.

மோசடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணத்தைத் திருப்பித் தரும் செயல்முறையை விரைவுபடுத்த சிண்டிக்கேட்டுகள் மற்றும் ஏமாற்று குற்றத்தை மற்றவர்கள்சுமக்க(கழுதை கணக்கு) வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, குற்றவியல் நடைமுறைச் சட்டம் உள்ளிட்ட சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் தொடர்புடைய நிறுவனங்கள் பரிசீலித்து வருவதாக அவர் கூறினார்.

இனம், மதம் அல்லது அரசியல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தரமான கல்வி அனைவருக்கும் சொந்தம் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி தரம், சமத்துவம் மற்றும் அணுகலை மேம்படுத்த மலேசிய கல்வி அமைச்சகம் (கேபிஎம்) உறுதிபூண்டுள்ளது என்று அமைச்சர் ஃபத்லினா சிடெக் கூறினார்.

"இனம், மதம் அல்லது அரசியல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் தரமான கல்வி அனைவருக்கும் சொந்தமானது" என்று அவர் 2023 ஆம் ஆண்டுக்கான முதலாம் ஆண்டு மாநிலக் கல்விக் குழு (MJEPN) கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

மேலும், அந்தந்த மாநிலங்களில் கல்வி தொடர்பான விஷயங்களை முன்னிலைப்படுத்தஇதுஎஸ்கோவுக்கு வாய்ப்பளித்தது என்றார். MJEPN என்பது நாடு முழுவதும் உள்ள மாநிலங்களின் கல்வி எஸ்கோக்கள் உட்பட கல்வி அமைச்சு மற்றும் பங்குதாரர்களுக்கு இடையேயான தகவல்தொடர்புகளை மிகவும் திறமையாகவும் வெளிப்படையாகவும் மாற்றுவதற்கான ஒரு முயற்சியாகும் என்றார்.

# நாட்டில் வேலையின்மை தொடர்ந்து குறைந்து வருகிறது!

**ஷா ஆலம்,** சொக்சோ எனப்படும் சமூக பாதுகாப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் வேலைவாய்ப்பு கண்காட்சி வழி நாட்டில் வேலையின்மை தொடர்ந்து குறைந்து வருவதாக மனிதவள அமைச்சர் வ சிவகுமார் தெரிவித்தார்.

சொக்சோ மூலம் மனித வள அமைச்சு நாடு தழுவிய அளவில் வேலை வாய்ப்பு கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடிகிறது.

தற்போது தேசிய வேலை-யில்லாமை தொடர்ந்து 3.5 விழுக்காடாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதமாக இருந்த வேலையின்மை பிரச்சனை இந்த முதல் காலாண்டில் 3.5 விழுக்காடாக குறைந்துள்ளது. குறிப்பாக மலாக்கா மாநிலத்திலும் வேலையின்மை தொடர்ந்து குறைந்து வருகிறது.

# இந்திய தொழில் துறைகளுக்கு அந்நியத் தொழிலாளர்கள்

**கோலாலம்பூர்,** இந்திய பாரம்பரிய தொழில் துறைகள் அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி கொள்ள முறையாக விண்ணப்பம் செய்யும் படி என்று மனிதவள அமைச்சர் வி. சிவக்குமார் வலியுறுத்தினார்.

பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கம் இந்திய பாரம்பரிய தொழில் துறைகளில் வேலை செய்ய 7,500 அந்நியத் தொழிலாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது..

முடிதிருத்தும் கடைகள், நகைக் கடைகள் மற்றும் டெக்ஸ்டைல்ஸ் ஆகிய இந்திய பாரம்பரிய தொழில் துறைகளுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக இந்திய பாரம்பரிய தொழில் துறைகள் அந்நிய தொழிலாளர் இல்லாததால் பெரும் பாதிப்பை எதிர் நோக்கி வந்தனர்.

இப்போது 7,500 அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருப்பதால் இந்திய பாரம்பரிய தொழில் துறைகளுக்கு புதிய விடிவுகாலம் பிறந்துள்ளது என்று அவர் சொன்னார்.

அரசாங்கம் வழங்கி இருக்கும் இந்த அருமையான வாய்ப்பை முறையாக பயன்படுத்தி கொள்ளுங்கள் என்று இந்திய பாரம்பரிய தொழில் துறைகளை மனிதவள அமைச்சர் சிவகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டு இந்திய பாரம்பரிய தொழில் துறைகள் மீண்டும் செயல்பட வாய்ப்பு வழங்கிய பிரதமருக்கு இந்த வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அமைச்சர் சிவகுமார் தெரிவித்தார். குறைந்து வருகிறது.

# மின் மோட்டார் சைக்கிள் வாங்க பி40 தரப்பினருக்கு ஊக்கத்தொகை

**கோலாலம்பூர்,** மின்சார வாகனங்கள் (EV) குறிப்பாக மின்-மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கு 2024 வரவு செலவுத் திட்டத்தில் ஊக்கத் தொகை வழங்குவது குறித்து முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சு பரிந்துரையை முன்வைத்துள்ளது.

நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தேச ஊக்கத்தொகை பரிந்துரை, குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரை இலக்காக் கொண்டிருக்கும் என்று அமைச்சின் துணைத் தலைமைச் செயலாளர் (தொழிலியல்) டத்தோ ஹனாபி சக்ரி கூறினார்.

மின்சார வாகனத் தொழில் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி குறித்து கருத்துரைத்த அவர், தேவை மற்றும் விநியோகம் ஆகியவற்றின் அடிப்படையில் தொழில் துறையை மேம்படுத்த அரசாங்கம் கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பல சலுகைகளை அறிமுகப் படுத்தியுள்ளது என்றார்.

மலேசியாவில் இரு சக்கர மின் வாகனங்களுக்கான சந்தை இன்னும் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே, 2024 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள உதவித் தொகைத் திட்டம் உள்ளிட்ட முயற்சிகள் மலேசியாவில் மின் வாகனப் பயன்பாட்டை அதிகரிக்கும் என நம்புகிறோம் என அவர் குறிப்பிட்டார்.



## ஆசிய விளையாட்டில் ஸ்குவாஷ் அணி, 3வது தங்கப் பதக்கம்

**ஹாங்சோ,** தேசிய மகளிர் ஸ்குவாஷ் அணி, இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியனான ஹாங்காங்கை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை மீட்டது.

ஆனால் ஹாங்சோ ஒலிம்பிக் விளையாட்டு மைய ஸ்குவாஷ் கோர்ட்டில் இன்று நடந்த போட்டியின் மூலம் முதல் புள்ளியைப் பெற்ற பிறகு, ஹாங்காங் தங்கப் பதக்கத்தை தற்காக்க முடியும் என தோன்றியது.

உலகத் தரவரிசையில் 32வது இடத்தில் உள்ள ரேச்சல் அர்னால்ட், டோங் ட்ஸ் விங்கிற்கு கிட்டத்தட்ட 50 நிமிடங்கள் கடும் சவாலை அளித்து 11-7, 7-11, 11-8, 8-11, 6-11 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

எனினும், உலகின் 36 வது வீராங்கனையான எஸ்.சிவசங்கரி 11-5, 11-8, 11-6 என்ற செட் கணக்கில் Ho Tze Lok-ஐ வீழ்த்தி இரண்டாவது ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி சமன் செய்தார்.

தீர்மானிக்கும் ஆட்டத்தில் ஐஃபா அஸ்மான், 11-5, 11-8, 11-13, 11-8 என்ற செட் கணக்கில் சான் சின் யுக்கை வீழ்த்தி, ஆசிய விளையாட்டுப் போட்டியில் மலேசியாவுக்கு மூன்றாவது தங்கத்தைப் பெற்றுத் தந்தார்.

குவாங்சோ 2010 பதிப்பில், டத்தோ நிக்கோல் டேவிட் தலைமையிலான மலேசியா குழு தங்கப் பதக்கத்தை வென்றது மற்றும் மீண்டும் இன்சியான் 2014 இல் சாதனையை நிகழ்த்தியது, ஆனால் ஜக்கார்தா-பாலெம்பாங் 2018 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவிடம் அரையிறுதியில். தோற்ற பிறகு வெண்கலம் மட்டுமே வென்றது.

இந்த வெற்றியின் மூலம் செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 8 வரை நடைபெறும் ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டியில் மலேசியாவுக்கு மூன்றாவது தங்கப் பதக்கத்தை அளித்ததுள்ளது.

## ஷெரின் வெண்கலம் வென்றார்
## 17 ஆண்டு காத்திருப்புக்கு முடிவு

**ஹாங்சோ,** ஆசிய விளையாட்டுப் போட்டியில் தடகளப் போட்டியில் மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கத்தை வென்ற மலேசியாவின் 17 ஆண்டுகால தடகளப் பதக்கத்திற்கான காத்திருப்புக்கு தேசிய தடகள ராணி ஷெரின் சாம்சன் வல்லபோய் முடிவு கட்டினார்.




25 வயதான தடகள வீரர் இங்குள்ள ஹாங்சோ ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் 52.58 வினாடிகளில் ஓடி வெற்றி பெற்றார். அவரின் தேசிய சாதனையான 51.80 வினாடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்பார்த்தபடி, பஹ்ரைன் ஓட்டப்பந்தய வீரர்கள் முதல் இரண்டு இடங்களை பிடித்தனர், அடேகோயா ஒலுவாகேமி முஜிதாத் 50.66 வினாடிகளில் ஓடி தங்கத்தையும், சல்வா ஈத் நாசர் (50.92 வி) வெள்ளியையும் வென்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த வீராங்கனையான ஷெரின், முதல் சுற்றின் மூன்றாவது ஹீட் போட்டியில் 52.89 வினாடிகளில் வென்று சாதனை படைத்ததன் மூலம் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

கடைசியாக 2006 ஆம் ஆண்டு தோஹாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் மலேசியா பதக்கம் வென்றது, அப்போது ரோஸ்லிண்டா சாம்சு மற்றும் பெண்களுக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தில் முறையே ரோஸ்லிண்டா சாம்சு வெள்ளி மற்றும் வெண்கலம் வென்றனர்.

1986 ஆம் ஆண்டு தென் கொரியாவின் சியோலில் நடைபெற்ற 800 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும், 1990 ஆம் ஆண்டு 4×400 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும் வென்றர் ஷெரீனின் தாயார், எஸ். ஜோசபின் மேரி. அவரின் அடிச்சுவடை பின்பற்றி மகள் இன்றைய வெற்றியை கண்டுள்ளார்..

“இது நிறைய அர்த்தம். உண்டு. இந்த நிலையை அடைய கடினமாக உழைத்து மலேசியாவுக்கு பதக்கம் வெல்வது மகிழ்ச்சியாக இருக்கிறது. எனது தாயும் தந்தையும் (Samson Vallabouy) தேசிய விளையாட்டு வீரர்கள், அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவர்களை பெருமைப்படுத்துவது ஆனந்தமாக இருக்கிறது என்றார்.



## பள்ளிகளில் விபத்துகளைத் தவிர்க்க விளையாட்டு
### வசதிகளை பராமரிப்பதற்கான வழிகாட்டி

**கோலாலம்பூர்,** பள்ளி மைதானங்கள் விபத்தின்றி இருப்பதை உறுதி செய்வதற்காக பள்ளிகளில் விளையாட்டு வசதிகளை பராமரிப்பதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை வழிகாட்டி (எஸ்ஓபி) அதிகரிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஃபத்லினா சிடெக் கூறினார்.

மாநிலக் கல்வித் துறை (ஜேபிஎன்), மாவட்டக் கல்வி அலுவலகம் மற்றும் பள்ளிகள் முழு விளையாட்டு உள் கட்டமைப்பையும் கண்காணிக்கும் மற்றும் பள்ளி மைதானம் மாணவர்கள் பயன்படுத்த பாதுகாப்பான நிலையில் இருப்பதையும் கல்வி அமைச்சு (கேபிஎம்) உறுதி செய்யும் என்றார்.

”மாணவர்கள் புறப்பாட நிகழ்வுகளில் ஈடுபடும் போது விழிப்புடன் இருக்குமாறு பள்ளி நிர்வாகிகள் எப்போதும் நினைவூட்ட வேண்டும்” என்று அவர் இன்று தனது பேஸ்புக் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அதே நேரத்தில் சென், அந்தோணி தேசியப் பள்ளியில் தனது வகுப்புத் தோழர்களுடன் புறப்பாட செயல்பாட்டின் போது சேதமடைந்த உலோகத்தாலான கோல் கம்பத்தால் 11 வயது மாணவிக்கு மரணம் ஏற்பட்டதை தொடர்ந்து, மாணவியின் குடும்பத்திற்கு ஃபத்லினா தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைக்கு உதவ, மலேசிய காவல்துறைக்கு MoE ஒத்துழைக்கும் என்றும் ஃபத்லினா கூறினார்.

## ஆசிய பாரா 2022
## மலேசியா 39 பதக்கங்களை
### வென்று இலக்கை அடைந்தது



**ஹாங்சோ,** ஆசிய பாரா 2022 விளையாட்டுப் போட்டியில் 35 பதக்கங்கள் வெல்லும் இலக்கைத் தாண்டியதற்காக மலேசியா பெருமிதம் அடைந்துள்ளது.

நாட்டின் ‘சிறப்பு’ விளையாட்டு வீரர்கள் 7 தங்கம், 15 வெள்ளி, 17 வெண்கலம் என 8 போட்டிகள் மூலம் மொத்தம் 39 பதக்கங்களை வென்று இலக்கை அடைந்துள்ளனர்.

மலேசியா தடகளம் போட்டியில் 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் வென்ற நிலையில் போசியா போட்டியின் வழி 1 தங்கம் மற்றும் 2 வெள்ளி பதக்கங்கள் கிடைத்தன.

மேலும், சைக்கிள் ஓட்டும் போட்டியில் 1 தங்கம், 6 வெள்ளி மற்றும் 4 வெண்கல பதக்கங்களை மலேசியா கைப்பற்றியது. அதனைத் தொடர்ந்து, பளு தூக்கும் போட்டியின் மூலம் 1 தங்கம் மற்றும் 1 வெண்கலத்தை விளையாட்டு வீரர்கள் பெற்று தந்தனர்.

1 தங்கம் மற்றும் 4 வெண்கலத்தை நீச்சல் போட்டியின் மூலம் மலேசியா வென்ற வேளையில் பூப்பந்து விளையாட்டு வீரர்கள் வழி 2 வெள்ளி மற்றும் 2 வெண்கல பதக்கங்கள் கிடைத்தது.

# இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கு வெ.5 கோடி மானியம்



**கோலாலம்பூர்,** நாட்டிலுள்ள பதிவு பெற்ற இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கு 5 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவதாக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

வழிபாட்டுத் தலங்களில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று நேற்று 2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது நிதியமைச்சருமான அவர் தெரிவித்தார்.

இது தவிர, தேசிய கலை, இலக்கியப் படைப்புகளை காட்சிப்படுத்தும், மேடை நாடகங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் மற்றும் இளைஞர்களிடையே தலைசிறந்த படைப்புகளை வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் அமைப்புகளுக்கு உதவ ஐந்து கோடி வெள்ளி மானியம் ஒதுக்கப்பட்டு-ள்ளதாகவும் அவர் சொன்னார்.

சபா மற்றும் சரவாவில் கலை, கலாசார நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கும் சயாமிய சிறுபான்மைக் குடியினர் போன்ற தரப்பினரின் மொழிகளை காப்பதற்கும் பேராக் இன மற்றும் கலாசார மையத்தை நிறுவவும் ஒரு கோடி வெள்ளி ஒதுக்கீட்டை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது என அவர் தெரிவித்தார்

# என்.ஐ.எம்.பி. 2030 - முதலீட்டில் 10 விழுக்காட்டை அரசாங்கம் ஒதுக்கும்



**ஷா ஆலம்,** புதிய தொழில்துறை பெருந்திட்டத்தின் (என்.ஐ.எம்.பி.) பணி இலக்கிற்கான உந்து சக்தியாக விளங்கும் வகையில் அத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் பத்து விழுக்காட்டை அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

மொத்தம் 9,500 கோடி வெள்ளி முதலீட்டைக் கொண்ட இந்த திட்டத்தின் வாயிலாக சராசரி 4,510 வெள்ளி மாதச் சம்பளத்துடன் கூடிய 33 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று அவர் சொன்னார்.

வட்டார பொருளாதார வல்லரசாக நாட்டை உயர்த்துவதை இந்த மடாணி பொருளாதார கட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்த நோக்கத்தை அடைவதற்கு ஏதுவாக பொருளாதார கட்டமைப்புகள் சீரமைப்புச் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் நடப்பிலுள்ள வாய்ப்புகளை மேம்படுத்த முடியும் என்று நாடாளுமன்றத்தில் இன்று 2024 வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூர் பொதுக் காப்பீட்டு திட்டத்தில் 57 பேர் (இன்சான்) இழப்பீடு RM669,000 பெற்றனர்

**கோம்பாக்,** சிலாங்கூர் மந்திரி புசார் (கட்டமைப்பு) எம்பிஐ இதுவரை மொத்தம் RM669,000யை 57 சிலாங்கூர் பொதுக் காப்பீட்டுத் திட்ட (இன்சான்) இழப்பீடாக வழங்கியுள்ளது.

கடந்த ஜனவரியில் இருந்து தனது தரப்பில் 129 உரிமைகோரல்கள் கிடைத்துள்ளன. இருப்பினும் சில விண்ணப்பங்கள் இன்னும் செயல்பாட்டில் உள்ளன என அதன் தலைமை இயக்க அதிகாரி சைபொல் யாசன் எம் யூசோப் தெரிவித்தார்.

“ஓட்டுனர் உரிமம், சாலை வரி மற்றும் வேறு சில ஆவணங்கள் இல்லை போன்ற தாமதச் சிக்கல்களை ஒப்புதல் பெறுவதற்கு முன் ஆய்வு செய்ய வேண்டும்,” என்று அவர் கூறினார்.

ஆறு மில்லியன் மக்களை இலக்காகக் கொண்ட இந்தத் திட்டம், நிரந்தர ஊனம் மற்றும் விபத்துக்களால் மரணம் அடைந்தால் RM10,000 வரை பாதுகாப்பு அளிக்கிறது.

இது RM10,000 நிதி உதவியை வழங்குகிறது. அதே நேரத்தில் மரணம் ஏற்பட்டால் அவர்களின் வாரிசுகள் RM1,000 பெறுவார்கள்





# சம்பள உயர்வுக்கான கொள்கைகளை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை

**கோலாலம்பூர்,** சம்பள விகிதத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக அது சார்ந்த கொள்கைகளை அரசாங்கம் மேம்படுத்தவுள்ளது. குறைந்த பட்ச சம்பள முறையை மறுஆய்வு செய்வது, சிறப்பான வேலை சூழலை உறுதி செய்யக்கூடிய சட்டங்களை இயற்றுவது மற்றும் முன்னேற்றகரமான சம்பள மாதிரியை அமல் செய்வது ஆகியவையும் அவற்றில் அடங்கும்.

மேம்பாட்டைந்த நாடுகளுக்கு இணையாக இருக்கும் வகையில் வருமான பங்களிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45 விழுக்காடாக அதிகரிக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று நிதியமைச்சு இன்று வெளியிட்ட 2024ஆம் ஆண்டிற்கான பொருளாதார கண்ணோட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில் திறன் இல்லாத அந்நியத் தொழிலாளர்களைச் சார்ந்திருப்பதைத் தவிர்த்து தானியங்கி முறைக்கு மாறுவதற்கு ஏதுவாக பல அடுக்கு லெவி முறையை அரசாங்கம் அமல்படுத்தும் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

“மலேசியா- ஆசியாவின் முன்னணிப் பொருளாதாரம்“ எனும் கருப்பொருளைக் கொண்ட மடாணி பொருளாதார செயல் திட்டத்தின் கீழ் இந்த வியூகங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்டார்.




Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor